தொண்டன்
V3 No.5 30 Jan 194[illegible]

JL
ഠ211, N28K9N
N30·3·5
189089

820

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5-FEB 1930

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ ஜனவரி ௴ 30௳ [No. 5.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 81
2. அப்பர் (வீணையும் யாழும்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 83
3. நம்மாழ்வார் வைபவம் (திருவாய்மொழியின்ஏற்றம்) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 85
4. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A., B.L. 87
5. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (சோழரும் சைவரும்) E. N. பத்மாவதி அம்மாள் B. A. 89
6. தமிழ்ப்பாட்டு (கிருஷ்ணன் தூது) 90
7. சூரத்துநகரிலுள்ள காப்பிக்கடை (Tolstoy) K. இராஜகோபாலன் 92
8. இலஞ்சிப் பாவை (உள்ளக்கருத் துணர்த்தல்) T. S. நடராஜபிள்ளை, B. A., B. L 93
9. கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 96
10 வர்த்தமானம் 99

இன்று முதல் அனுப்பிவருகின்ற வி. பிக்களைச் சந்தாநண்பர்கள் தவக்கமின்றிப் பெற்றுக்கொள்வர் என நம்புகின்றோம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. இல்லையாதலால் அங்கிருப்பவர் உடனே தம் சந்தாவை மணியார்டர் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானேஜர்.

## கலா நிலயம்

### அறியாமை வேண்டப்படும்.

### 4

அறியாமை யென்னுமத் தத்துவத்தி னருமையை ஸாக்ரிடீஸ் விளக்கியவாறு கண்டோம். இன்னதற் கேற்றபடி அப்பெருமகன் நோக்கமும் வாழ்க்கையு மமைந்திருந்தன. மாநுடப் பிறவியின் முற்றிய பயன், இவ்வண்ணம் அறிதொறும் தம் அறியாமையைக் காண்பதற்கியன்ற புத்தியின் பயிற்சியே என்பர். நன்மைகளிலெல்லாம் நன்மை மெய்ம்மையேயாதலால், அம்மெய்ம்மையை எய்துதற்குரிய நெறியும் அறியாமையை அறிதற்கொத்த இவ்வறிவே என்பது அவர் கொள்கை. எல்லாம்வல்ல முழுமுதற் பொருளினது அம்சமாக மனிதரிடத்தில் தாம், அறிந்ததிவ்வளவு அறியாததிவ்வளவு எனப் பகுத்தறியும் சக்தி வாய்த்திருக்கின்றதெனக் கருதினர். இப்பகுத்தறிவின் முடிவையே துணைபற்றி வாழ்கின்ற வாழ்க்கையின் பயன் இங்கு எவ்விதமாய்த் தோன்றினும், மறுமையின்கண் ஆன்மநிலை அனைத்தும் நேர்மையுறும் என்பது அவர் நம்பியவைகளில் முக்கியமான தொன்றும். இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் பரம்பொருள் போன்றிடுவார் என்ன உறுதிகூறினர் ஸாக்ரிடீஸ். பசிதாக ராகத்துவேஷங்களைக் கனற்றிவைக்கும் நோக்கங்களுக் கிடங்கொடுத்து இழிவடைந்து வாராமல், அத்தெய்வ நன்னிலை எய்தும் பொருட்டுப் புத்தியைத் தூய்மைசெய்து பயிற்சியால் பெருக்குவதே மாநுடதருமமென்றுசாற்றினர். "தர்மமல்லால் மனிதர்க்குவேண்டிய சாஸ்திரம்வேறொன்றுமில்லை; குறைவற்ற புத்தியே நிறைவுற்ற தர்மமாகும்; ஆதலின், அறியாமையை அறியாத அறியாமையொன்றே பாவம். எனின், எல்லாப்பாவங்களும்தெரியாது செய்யப்படுபவை என்பது ஏற்படுகின்றது. அறியாமையை அறிந்துள அறிவாளி எவனும் பாவத்தைச் செய்ய இயலாதவன் ஆகின்றான். சாஸ்திர சம்பன்னன் அவனே," என்பது தத்துவத்துறை யளாவிய இம்மேன்மையோர் முடிவு.

வாழ்க்கையை வழுவின்றி விழுப்பமுற நடத்துதற்கு இதனினு முயர்ந்ததோ ருறுதி யாண்டுங் காணலருமை. காமக்குரோதிகளா லியங்கலாகும் பாவங்களுக்கெல்லாம் அவித்தை (அறியாமை) காரணமென்னுமிக் கொள்கை இந்தியர் தத்துவத்தில் புதியதன்றெனினும், அவ் வறியாமை என்பதற்குத் தன்னுடைய அறியாமையை அறியாதிருத்த லென்னும்

வகையில் இலக்கணங் கூறியவர் கிரீஸ்தேச வித்தகர் ஸாக்ரிடீஸே யாகின்றார். இவ்விரண்டு வகையாலும் அந்தத்தில் குறிக்கப்படும் பொருள் ஒன்றேயாயினும், ஸாக்ரிடீஸ் விளக்கியபடி தம் அறியாமையைக் கருத்துட்கொண்டு உலககருமங்களில் ஊடாடுவார் பெரும்பாலும் தீமைக்கிடங்கொடாத் தேற்றத்தாராதல் எளிதி லியலுமென நினைக்கின்றோம். இதனால், "யானொன்று மறியேன், அறிய வல்லேனு மல்லேன்" என்று மாந்தர் கையற்றுக் கழியவேண்டுமென யாம் விதிக்கின்றோமென் றெண்ணலாகாது. எத்திறத்திலும் எந்நிலையிலும் ஒவ்வொருவனுடைய அறிவும் அறியாமையும் ஒத்த அளவினதாயிருக்கும். எத்துணைக் கெத்துணைத் தன் அறியாமையை அறிகின்றானோ அத்துணைக்கத்துணை யவன் நன்மை யடைகின்றானென்று முன்னர் விளக்கிய உண்மைக்கிணங்க, அறியாமையின் மிகுதியைத் தெரிந்துகொள்வதற்கு அதற்கேற்ற அளவு அறிவும் மிகுந்திருக்க வேண்டுமென்பது வெளிப்படை. எனவே கல்வி கேள்வி ஆராய்ச்சிகளால், அறிவைப் பெருக்கிக்கொண்டு வருதல் இன்றியமையாததே. ஒன்று மறியாதான் எல்லாம் தெரிந்தவன்போல் விவகரிப்பதும், எல்லாந் தெரிந்தவன் என்று எண்ணுதற்கொத்த வொருவன் ஒன்றுந் தெரியாதென விவகரிப்பதும் உலகத்தி னுண்மையியல்பாய்க் காணப்படுகின்றன. ஆதலின் அறிவினால் எய்திய அறியாமையையே இங்குப் பாராட்டிப் பேசுகின்றோம். ஸாக்ரிடீஸ் செப்பியது மதுவே.

ஈவோர் ஏற்போர் இருதிறத்தோர்க்கும் இன்பமளிக்குமக் கொடையேபோல் இவ்வறியாமை தன்னலம் எய்தற்கும் பிறர்நலம் பேணற்கும் உதவ வல்லது. எவ்வகையில் இது சாதிக்கப் பெறுகின்றதென்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

விழுப்பந்தரு மொழுக்கத்திற் கடிப்படையாயிருப்பது அடக்கம். அறிதோறு 'மறியாமை கண்டுவருவான் மாட்டே இவ்வடக்கம் கைகூட இயலும். கற்றடங்கலாற்றுதல் என்ன நாயனார் இச்செவ்வியைத்தான் பாராட்டியிருக்கின்றார். அடக்கமுளதேல் இந்நாள் எல்லாரும் எத்துறையிலும் புக்குழன்று வாய்தந்தன கூறி ஆரவாரம் செய்வார்களோ! கடவுளின் உண்மைமுதல் உணவின் தன்மைவரை ஒவ்வொன்று தாம் உரைப்பதற்குளதென்று எண்ணுதார் யார். "கல்வியா, என்னைக்கேள்; கடவுளா, என்னைக்கேள்; கைத்தொழிலா, என்னைக்கேள்; ஆட்சி முறையா, அனைத்தும் என்னையேகேள்" என்றென்று தம் அறியாமையை உணரும்வகை கற்றடங்காதார் கொள்ளையிற் கூறுங் கூற்றினால் வரும் விபரீதங்களைக் கண்டு வருகின்றோம். இவ்விதக் கருமங்களைத் துவக்கிவிட்டால் பிறகு அறிவினது வளர்ச்சிக்குச் சிறிதேனும் இடமில்லாமற் போகின்றது. கற்றாய்ந்தடங்கு மாற்றலிலாரெல்லாம் கோட்டிகொளத் தலைப்படுகின்றனர். பொல்லா வொழுக்கத்தில் உலகம் உழல்வதற்கு இதனினும் வேறு அளறு வேண்டுமோ! முன்னோர் தலையங்கத்தில் நாம் முடித்துக்காட்டியபடி உள்ளொன்றும் வைக்காமற் புறமொன்று பேசுவார் ஊடாட்டம் உலகில் மிகுதியாதலும், வெறியாட்டுவோன் உடுக்கை ஒலிக்கவொலிக்க அயலிருந்து கண்டிருப்போர் கண்ணும் மனமும் சுழலலாமாறுபோல், பெரும்பான்மையோர் தலை ஒவ்வோரளவு அவிழ்ந்தாட நேர்கின்றது. உண்மையோ ஒருபுறமிருக்க உலகம் மறுபுறம் போகின்றதென்று மேலோர் பரிவுற மாந்தர் தாழ்மையே பூண்டு தவிக்கின்றவ ராகின்றார். வாழ்க்கையின் வைப்பாகிய அமைதியை இழந்தபின் பெறுவதற்கு வேறென்னுளது! ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையராயிருப்பதற்கெல்லாங் காரணம், மக்கள் தாம் அறியவேண்டுவன எவையென்று தேர்வதற்குரிய அறிவை (அல்லது அறியாமையை) பெருமையே என்பதல்லால் வேறெதனிலுங் காணமாட்டோம்.

இவ்வண்ணம் உலகத்தை உழக்குகின்றவர்களை அறிவாளிகளென் றெண்ணவோ அருமையாயிருக்கின்றது. ஆயினும், அன்னவரைத் தீயரென்றும், சுயநலச் சூழ்ச்சியரென்றும், மதியிலிகளென்றும் வைவது வாய்க்கெளிதேயன்றி இத்தகைய வசைகளுக்கும் அவர் வாஸ்தவத்தில் பாத்திரர்களல்லர். பொதுஜன வாழ்க்கையின் சார்பாகவுரைக்கும் இவையாவும் தனிவாழ்க்கைக்கும் ஒக்கும். தனக்கொருவன் தீங்கிழைக்கின்றான் என்னுமோர் மடமையாலன்றோ பகை பிறக்கின்றது? இகலுடைய வழக்கிற்கெல்லாம் இவ்வெண்ணமே காரணம். உண்ணுழைந்து ஆராயுமிடத்துப் பிறருக்குத் தீங்காகின்ற செய்கைகள் சிந்தையால் தெரிந்து செய்யப்படுவன அல்லவென்பது புலப்படும். தம்முடைய அறியாமையைத் தெரிந்து கொள்ளாதாரே பிறர்கேடு சூழ்வர். ஆதலின் அவர்களைக்கண்டு இரங்கத்தான் வேண்டுமேயன்றி இகல்கொள்ளல் ஏற்றதன்று. இனி, தம்முடைய அறியாமையைத் தெளிந்தவர்கள்தாம் மற்றவர் எவ்வகை அறியாமையில் உழல்கின்றன ரென்பதை உணரக் கூடியவராவார். இந்நாய தத்துவத்தை,

> தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
> றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
> யெரிவாய் நிரயத்து வீழ்வார்கொ லென்று
> பரிவதூஉஞ் சான்றோர் கடன்,

என்னும் நாலடியார் செய்யுளில் நன்கு காண்கின்றோம். தங்குறை தீர்வுள்ளாது தளர்ந்து பிறர்க்குறூஉங் வெங்குறை தீர்ப்பிக்கும் விழுமியோர், தமக்குத் தீங்கிழைப்பவர் அறியாமையை அறியும் அறிவின்மையால் அது செய்கின்றார் என்பது ஓர்ந்து, அத்தீங்கினால் தாங்கள் ஆளாகும் கஷ்ட நஷ்டங்களைக் கருதாமல், தீதுபுரிந்தவர் இனிப் படவேண்டியிருக்கின்ற நரகவேதனையையே நினைத்து வருந்தி, அதனில் அவர் சேராவண்ணம் விலக்க முயல்வதற்கே முற்படுவர் என்பது திண்ணம். எனின் இகலிற்கினி இடமேது? இகலில்லையேல் வாழ்க்கையி னமைதி சிதைவுறாமல் காக்கப்பெறுகின்றது.

தம்முடைய அறியாமையைத் தாம் அறியாததாலேயே மனிதர் மூர்க்கர்களாகிப் பாவங்கள் செய்கின்றனரென்பதையும், அஃதறிந்த மேலோர் பரிவாரன்றி இகலாரெனநாலடியார் காட்டியதையும் விளக்குகின்ற வாசகமொன்று கிறிஸ்தியர் வேதத்தில் வந்துளது. நாமிங்கு உரைத்தவைபனைத்தையும், ஏசுநாதர் இவ்வுலகில் இறுதியாக விளம்பிய அத்திருமொழி தன்னுளடக்கியிருத்தலால் மக்கள் வாழ்க்கைக்கு உறுதி தரும் அரியதோ ரூன்றுகோலாகும்:—

நவையறு வாழ்க்கையால், நண்ணிய அன்பினால் திப்பியவுணர்வினால் நல்லோர் நாயகமாய் விளங்கிய இயேசுகிறிஸ்துநாதரை, தமக்குப் பகையெனக் கருதிய விடருந் தூர்த்தரும் விட்டேற்றாளருங்கூடிக் கழுமரத்தி லறைவித்து ஆரவாரஞ் செய்தபோது, அம் மேன்மையோர் கடவுளை நோக்கி, "எந்தாய், இவர்களை மன்னித்தருள்க; தாம் யாது செய்கின்றோம் என்று அறியார் இவர்" என்ன வேண்டிக் கொண்டனர்.

பிறர் செய்யுந் தீமையை இவ்விதங் கருதிநிற்கும் மதியலால் மாந்தர்க்கு வேண்டுவது வேறொன்றில்லை.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

[65-வது பக்கத் தொடர்ச்சி]

### 2. (i) வீணையும் யாழும்.

மேலே கண்ட செங்கோட்டு யாழ்போன்ற இசைக் கருவியை வீணை யென்பர். இதனிசையையே விடந்தீர்த்த திருப்பதிகத்தில்,

> " ஏழுகொ லாமவ ரூழி படைத்தன
> ஏழுகொ லாமவர் கண்ட விருங்கடல்
> ஏழுகொ லாமவ ராளு முலகங்கள்
> ஏழுகொ லாமிசை யாக்கின தாமே ",

என்றனர் திருநாவுக்கரசர். பரமன் மாத்திரமன்று, பரமனைச் சுற்றித்திரியும் பூதகணங்களும் வீணைவாசிக்குமெனத் தேவாரத்திற் கூறுவர்:—

> கொக்கரைகுழல் வீணை கொடுகொட்டி
> பக்க மேபகு வாயன பூதங்க
> ளொக்க வாட லுகந்துடன் கூத்தரா
> யக்கி னோடர வார்ப்ப ராரூரரே.

திருவாரூர் திருக்குறுந்தொகை 1.

> பாடுமே யொழியாமே நால்வே தமும்
> படர்சடைமேலொளிதிகழப்பனிவெண்டிங்கள்
> சூடுமே யரைதிகழத் தோலும் பாம்புஞ்
> சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகங்
> கூடுமே குடமுழவம் வீணை தாளம்
> குறுநடைய சிறுபூத முழக்க மாக்கூத்
> தாடுமே யந்தடக்கை யனலேந் தும்மே
> யவனாகி லதிகைவீ ரட்டனாரே.

திருவதிகைவீரட்டானம், அடையாளத்திருத்தாண்டகம் 5.

பரமன் பிச்சாண்டியாய் ஊர்களிற் சென்றபோதும் வீணை யவரிட மிருந்ததாகவும் கூறி, வண்டுகள் ஒலி யாழ்க்குச் சமமாக விளங்கும் திருவாமாத்தூர் தனதூரென்று மொழிந்து, மறைந்ததாக அப்பர் பாடிய அகப்பொருள் துறையொன்றை நோக்குக:—

> வெந்தார்வெண் பொடிபூசி வெள்ளை மாலை
> விரிசடைமேற் றான்சூடி வீணை யேந்திக்
> கந்தாரந் தாமுரலாப் போகா நிற்கக்
> "கறைசேர் மணிமிடற்றீர்! ஊரேது?" என்றேன்
> நொந்தார்போல் வந்தெனது இல்லே புக்கு
> "நுடங்குநே ரிடைமடவாய்! நம்மூர் கேட்கில்
> அந்தா மரைமலர்மேல் அளிவண் டியாழ்செய்
> ஆமாத்தூ ரென்"றடிகள் போயி னாரே!

திருவாமாத்தூர் - திருத்தாண்டகம் 2.

மற்றும்,

> "பண்ணார்ந்த வீணை பயின்ற
> விரலவனே! யென்கின் றாளா
> லெண்ணார் புரமெரித்த வெந்தை
> பெருமானே! யென்கின் றாளாற்
> பண்ணார் முழவதிரப் பாடலோ
> டாடலனே! யென்கின் றாளாற்
> கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
> சேர்வானைக் கண்டாள் கொல்லோ!

திருக்கழிப்பாலை-பண்-காந்தாரம்-6.

என்பன போன்ற பற்பல தேவாரத்தில் ஆங்காங்கு வருவதைக் காண்க.

### (ii) வீணை வாசிக்கு மரபு.

இனி வீணைவாசிக்கும் முறை யாதென ஆராய்வோம்:—பரமனும், பூதகணங்களும் மற்றுமுள்ள நாரதர் முதலான இருடிகளும், தேவர்களும் எவ்வாறு வீணையைவாசித்தாரென நாம்கண்டறியப்போதுமான உணர்ச்சி பெறவில்லை. செங்கோட்டியாழ்போன்ற வீணையை மாநிலமக்கள் வாசிக்குமுறை யாழ்வாசிக்கு முறையேயாம். சிவபெருமான் வீணை வாசிப்பது ஒருவாறு அப்பர் குறிப்பாய்க் காட்டுகின்றார்:—

> வண்ண மாக முறுக்கிய வாசிகை
> திண்ண மாகத் திருச்சடைச் சேர்த்தியே
> பண்ணு மாகவே பாடும் பழனத்தான்
> எண்ணு நீரவ னுயிர நாமமே.

திருப்பழனம்-திருக்குறுந்தொகை 3.

இதனால் வீணையைத் தரையில் உருட்டுந் தன்மை போல வாசிப்பதில்லை யென்றும், ஓவியங்களில் சரஸ்வதி முதலானோர் தாங்குவதுபோல், குடம் கீழும் மாடகவளைவு மேலுமாய், "ஆணி * யென்னும் மாடகத்தை † இடக்கை நால்விரலாற் றழுவி, வலக்கையில் பெருவிரல் குஞ்சித்து ஒழிந்த விரலெல்லாம் நிமிர்த்து (" பாதகை " யென்னும் இலக்கணமாய்) வாசிப்பது மரபென அறிகின்றோம். யாழில் தேவபாணி பாடு முறையின் சூத்திரம் காண்க:—

> " நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி
> யல்லியம் பங்கயத் தயனினிது படைத்த
> தெய்வஞ் சான்ற தீஞ்சுவை நல்யாழ்
> மெய்பெற வணங்கி மேலொடு கீழ்புணர்த்
> திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ
> மருவிய வினய மாட்டுதல் கடனே "

[வினயம் - தேவபாணி]

ஆகையால் பண்டைநாள் நமது முன்னோர் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குத லென்னும் நால்வகை விருத்தியிலும் வீணையின் இசை யெழுப்புவர். பரமன் இயங்கும்போது வீணை தடவுதல் சம்பந்தர் தேவாரத்திலும் காணலாகும்:—

> வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
> மிகநல்ல வீணை தடவி
> மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
> னுளமே புகுந்த வதனால்
> ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழம்
> வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே

*"ஆணி போலநீ யாற்ற வலியைகாண்
வணி போலிழிந் தேறியு மேங்கியுந்
தோணி யாகிய சோற்றுத்துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே"

திருச்சோற்றுத் துறை—திருக்குறுந்தொகை

†மாடக மென்பது வகுக்கும் காலை
கருவிளங் காழ்ப்பினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து
சதா மூன்றாகத் துளையிடற் குறித்தே.

ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

கோளறு திருப்பதிகம் 1.

இருத்தல் விருத்தியில், யானை தேர் புரவி பூனை முதலியனபோல் திரிதரவுடையன வென்றும், பது முகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அய முகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாத மெனத் திரிதரவில்லன ஒன்பதுவகை யெனவும் முன்னோர் கூறுவர். நாடகநூலார் இவ் விருப்பை ஐம்பதென விரி வரையறையாற் கூறி, தொகை வரையறை கூறுங்கால் மேற்கண்ட ஒன்பதிலடக்கினர்:—

"ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோ
ரோதிக் கொண்டனர் ஒன்பான் விருத்தி"

அவையே,

"பதுமுக முற்கட் டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாத
முளப் பட வொன்பது மாகும்
திரிதர வில்லா விருக்கை யென்ப"

இவ் வொன்பது விருத்திகளிற் றலைக்கண் விருத்தியாய்க் கொண்டது பதுமாசனமாம். இது யோகாப்பியாசத்திற்கும் சிறந்த ஆசனமாகும். முன்னோர் நாளில் யாவரும் இவ்வாசனமுறையில் தரையில் உட்காரும் வழக்கம்இக்காலம் அற்றுப்போய் நாற்காலியில் சதா நாளோட்டுவதால் பலவகைக் கீல்வாயு முதலியனவற்றால் வருந்துகின்றோம். இவ் வாசனமே இசைப் புலவர்களுக்கு இசைந்ததாகும். திருநாவுக்கரசு

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே"

தனித்திருக்குறுந்தொகை 1

என்பதில் இவ் வாசனத்திலிருந்து வாசிக்கும் வீணைகானத்தை எண்ணியதாய் விளங்குகின்றது.

"மாசில் வீணை" என்றது நால்வகைக் குற்றங்கள் நேராத வீணையெனக் கொள்க. அக்குற்றங்களாவன செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்பன.

" செம்பகை யென்பது பண்ணோ டொரா
வின்பமி லோசை யென்மனார் புலவர் "
" ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும் "
" கூட மென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வாராது மழுங்கி யிசைப்பதுவே "
" அதிர்வெனப் படுவ திழுமென லின்றிச்
சிதறி யுரைக்குநர் உச்சரிப் பிசையே "

இவை நான்கும் வீணைசெய்யும் மரக்குற்றத்தால் பிறக்கும்:—

"நீரிலே நிற்ற லழுகுதல் வேதல் நிலமயக்குப்
பாரிலே நிற்ற லிடிவீழ்தல் நோய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூடமதிர்வு நிற்றல்
சேரினோர் பண்க ணிறமயக்குப் படுஞ் சிற்றிடையே"

என்பதாலறிக. செம்பகை தாழ்ந்தவிசை. அது இன்பமின்றி யிசைக்கும். ஆர்ப்பு மாத்திரை யிறந்த ச்ருதி. இது ஓங்க விசைக்கும். கூடம் இசைநிறையாதது (Lacking in harmony). இதுதன் பகைநரம்பாகிய ஆறும் நரம்பினிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கும். அதிர்வு (அதிர்ச்சி) நரம்பைச் சிதற வுந்தலில் விடும்:—

இன்னிசைவழியதன்றியிசைத்தல்செம் பகையதாகும்
சொன்னமாத் திரையினோங்க விசைத்திடும் சுருதி [யார்ப்பே
மன்னிய விசைவராது மழுங்குதல் கூடமாகும்
நன்னுதால் சிதறவுந்த லதிர்வென நாட்டினாரே.

பஞ்சபாரதீயம்.

இக்காலத்தில் வீணை வாசித்தல் மற்றக் கலைகள் போல் தேய்ந்து கிடக்கின்றதால், ஆங்கிலர்வீணைக்குப் பண்விரவல் (Harmony) இல்லையென்றும் செவிக்குச் சிற்றின்பவோசையே (melody) உண்டென்றும் குறை கூறலானார். வீணைக்குப் பண்விரவுந் தன்மையின்றேல் மங்கலமின்றாம்; மங்கலமின்றேல் கடவுட்டன்மையான "திரு" அதைச் சாராது. இக்காலத்தில் வீணை பழைய முறைப்படி வாசிக்கும் புலவர்களில்லாமல் அன்னிய பாடையின் சங்கீதங்களைக் கையாண்டு நமது பண்களைக் கைநெகிழவிட்டதால், நமது வீணையின் மங்கல மின்னதென்றே தெரியவில்லை. வீணையில் பண்விரவுந் தன்மையு மறிந்திலர். அப்பர் காலத்தில் அத்தகைய அறியாமை யென்பதில்லை:—

குரவி னார்கொடு கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவு நீர்ப்பொன் பாலைத்து றையரே.

திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை-7.

பண்ணார்ந்த வீணை பயின்ற துண்டோ!
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
உண்ணா வருநஞ்ச முண்ட துண்டோ
ஊழித்தீ யன்ன வொளிதா னுண்டோ
கண்ணார் கழற்காலற் செற்ற துண்டோ
காமனையுங் கண்ணழலாற் காய்ந்த துண்டோ
எண்ணார் திரிபுரங்க ளெய்த துண்டோ
வெவ்வகையெம் பிரானரைக் கண்டவாறே

திருவினாத் திருத்தாண்டகம் 4.

தமிழில் இசையானது எப்பாடைகளிலும் காணாவகைகள் பொருந்தியதாகும். அணுவுக் கணுவிலும், மஹத்திற்கு மஹத்திலும் ஊடுருவிச் செல்லத்தக்க பெற்றிமை வாய்ந்தது. ஆயினும் இக்காலத்தில் யாம் கூறுவது பாஷாபிமான முதிர்ச்சியில் வரும் பேச்சென்று பலர் புறங்கூறுவர். அன்னோர் உணருமாறு அப்பர் தேவாரத்தில் மற்றுமொரு மேற்கோள் நோக்குவோம்:—

கண்ணவன்காண் கண்ணொள்சேர் காட்சி யான்காண்
கந்தருவம் பாட்டிசையிற் காட்டு கின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் றிறலானன்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்
மண்ணவன்காண் டீயவன்காண் நீரா னான்காண்
வந்தலைக்கு மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலா னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 1.

இதனினும் யாவர் நன்கு விளக்குவர். மற்றொருக்கால் திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தாலன்றி யாவராலும் வீணையிற் பண்கள் நிறப்பிக் காட்டுவாரிலர்.



வீணை வாசித்தலில் எட்டுவகைக் கலைகளுளவெனச் சிலப்பதிகாரம் கூறும். அவையே

" பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்
நண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
கண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
வெண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற் பரிவு தீர்ந்து......நடப்பனவாம்.

இவற்றைக் குறித்தே அப்பரும்,

" புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டும் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டு
நகையெட்டு நாளெட்டு நன்மை யெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டுந்
திசையெட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலார் கொண்ட நாளே ?"

என வினவுவார் போலும்.

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய் மொழியின் ஏற்றம்

### கம்பரும் நம்மாழ்வாரும்

67-வது பக்கத் தொடர்ச்சி.

இத்திருவாய் மொழியைத் திவ்வியப்பிரபந்தம் என்று வைணவர் கூறுவார். இந்நூலில், தத்துவங்களும் மனிதர்களுக்கு வேண்டிய ஹிதங்களும் புருஷார்த்தமும் தெய்வ பக்தியும், அவை கைகூடும் உபாயமும்கூறி, அவைகளுக்கு இடையூறு செய்வதற்கு உள்ள விரோதிகளைப்பற்றியும் தெளிவுறவிளக்குவதால், இந்நூலுக்குத் "திவ்வியம்" அதாவது தெய்வத்தன்மை பொருந்தியதென்று பெயர்வாய்த்தது. சொற்சுவையும் பொருட்சுவையும் நுகர நுகர நுண்மணலின் ஊற்றுப்பெருக்குப்போல் பெருக்கிப்பெருக்கித் தரும் அச்சுவையார் கடவுளின் உண்மைநிலையை யாவருக்கும் தெளிவாக ரசமாய்த் தெரிவிக்கும் என்று கம்பர் "மெய்தெரிக்கின்ற கோச் சடகோபன்றன் தெய்வக்கவி புவியில் சுரிக்கின்ற நுண்மண லூற்றொக்கும் தோண்டச் சுரத்தலினே" என்று சடகோபர் அந்தாதியில் பாடியுளார். பரம் பொருளைக் காட்டிக்கொடுப்பதில் வேதத்திலும் திருவாய்மொழி சிறந்ததென்றும் பாடியுளார். "உங்கள் வேதம்" திருவாய்மொழியைப்போல் "சாதிக்குமோ பரதத்துவத்தை? அன்னியசமயங்களின் "திருக்கை" (மாறுபாடுகளை) சேதிக்குமோ ? ஒன்றைச் சிந்திக்குமோ? ஆராய்ந்து அறியுமோ ? பொது நிற்கும் மெய்யைப்பொய்யைச் சோதிக்குமோ"? என்றுபெருமிதத்துடன் கேட்கின்றார் கம்பர். வேதமாகிய ஆழ்கடலில் திக்கு நெறி தெரியாமல் தயங்கும் அந்தணர்களுக்காகவே ஆழ்வார் ஜென்மமெடுத்து உபகரித்தாரென்று மற்றொரு செய்யுளில் கம்பர் கூறுகிறார்.

தலைவி வாக்காக "மெய்யன் குருகூர்ப் பாகத்தையாற்றும்சொல்" என்றுபாராட்டுகிறார். மேலும் வெகு ரசமாய்த் தெளிந்தபயனைக் கொடுப்பதால் "இயலோடு இசையின் பொருளிற் சிறந்த அலங்கார வல்லியில் போக்கில்உள்ளம் தெருளில் கரும்பொக்கும் ஆயிரம் பா" வென்றார். இப்பிரபந்தம் படிப்பவர் மனதை உருக்கித் தத்துவங்களைப் புகட்டுமென்று சில செய்யுள்களில் பின்வருமாறு கம்பர் கூறுகிறார்.

1 உயிர்த்தாரை யிற்புக் குறுகுறும்
பாமொரு மூன்றனையும்
செயிர்த்தார் குருகைவந் தார்திரு
வாய்மொழி செப்புலுற்றுன்
மயிர்த்தாரை கள்பொடிக் குங்கண்கள்
நீர்மல்கும் மாமறையு
ளயிர்த்தார் அயிர்த்த பொருள்வெளி
யாமெங்க ளந்தணர்க்கே. 33

["உயிர்நிலையில் புகுந்து பொருந்துகிற காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் கடிந்து விலக்குவாராகிய குருகைப்பிரபு அவதரித்திருக்கிறார். அவரது திருவாய்மொழியைச் சொல்லத் தொடங்கினால் தத்துவ ஆராய்ச்சி உள்ள அந்தணர்களுக்கெல்லாம் மயிர் புளகிக்கும். கண்களில் ஆநந்த பாஷ்பம் சொரியும். வேததத்துவத்தில் சந்தேகப் படுகிறவர்களுக்கு, உள்ளபடி உண்மைப்பொருள் வெளியாகும்.]

2 கூட்டங்கள் தோறும் குருகைப்
பிரான்குணம் கூறுமன்பர்
ஈட்டங்க டோறும் யிருக்கப்பெற்
றேமிருந் தெம்முடைய
நாட்டங்க டோறும் புனல்வந்து
நாலப்பெற் றேமினிமேல்
வீட்டங்கள் தோழர்க்கென் றேபெரும்
போகம் விளைகின்றதே. 86

[நம்மாழ்வார் குணங்களைப் புகழ்கிறஅடியார் கூட்டங்களிலெல்லாம் யாம் சேர்ந்திருக்கப் பெற்றோம். இவ்வண்ணம் கூடியிருந்து ரசானுபவத்தினால் இரண்டு கண்களினின்றும் கண்ணீர் பெருகி வடியப் பெற்றோம். இனிமேல் பரமபதத்தில், நம் தோழர்கள் எமக்கென்று போகங்களை வரையறுத்தலால் அங்குப் போகுமுன்பேயே எமக்குப் பேரின்பமானது விளைகின்றது.]

3 கற்றும் செவியுறக் கேட்டும்
பருகிக் களித்துமுள்ளே
முற்று முகப்பெய்து மூழ்கிக்
குடைந்து முகந்துகொடு
நிற்று நிலையுற நீந்துதும்
யாநித மாறனெம்மை
விற்றும் விலைகொள்ள வும்முரி
யான்கவி வெள்ளத்தையே. 73

[நம்மாழ்வார் பாடியுள்ள கவிகளை நாம் தினந்தோறும் கற்கக் கடவோம். அதன்பொருளைக் காதால் நன்றாகக் கேட்கக் கடவோம். அந்தக் கவிகளாகிற

ஆநந்த வெள்ளத்தைக் குடித்துக் களிப்போம். அவைகள் மனதினுள்ளேகுவியும்படி விழுங்குவோம். அந்த வெள்ளத்தில் ஆழ்ந்து ஸ்நாநம் செய்வோம். வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு நிலைக்கும் இடத்தில் நிற்போம். நிலைகொள்ளாத இடங்களில் அவ்வெள்ளத்தில் நீந்திச்செல்வோம்]

இப்பிரபந்தத்தைப் படிப்பவர் அதன் கல்வியுணர்ச்சியால் தூய மனத்தராவார்களென்று "உமக்கோ ருறுதி சொன்னேன்," "உம் மயக்கமெல்லாம் தீரும்," "திருக்கு(மாறுபாடுகள்) அறும்," "சிந்தை செவ்வே நிற்கும், தீங்கு அறும்." என உறுதி கூறுகின்றார்.

இவ்வளவோடு நிற்காமல் கம்பர், குருகூர்க் குலக்கொழுந்து ஒருவர் (அதாவது நம்மாழ்வார்) அவதரித்துள்ளார் என்றும், எளிதில் நீக்கக்கூடா வினைகள் நின்றும் தமரையும் மற்றுமுள்ள சத்குழாங்களையும் விடுவிக்க அவர் மனதில் நினைத்துள்ளாரென்றும், ஓ தீவினைகளே! நீங்கள் இனி எங்களை அப்ப ஏலாதென்றும், இனி இதற்குமேல் பிறவித்துயர் கடிந்தோமென்றும், அறைகூறுகிறார். "விழுப்பாரினி யெம்மையார் பிறவித்துயர் மெய்யுறவந்து அழுப்பா தொழிமினருவினைகாள்! உம்மை யப்புறத்தே இழுப்பான் ஒருவன் வந்து இன்று நின்றான்." என்று பெருமிதம் பேசுகின்றார். நம்மாழ்வாருடைய பிரபந்தங்களும், அவற்றை ஆசிரியர் மூலமாகக்கேட்க நமக்குச் செவிகளும், படிப்பதற்கு நாவும் கருத்தும், பயனு மடைவதற்குப் புத்தியும் உளவாயிருக்க இதைவிட்டு மெய்வருந்தித் தவஞ்செய்வதிலும் அக்நிமுகத்தில் வேள்வி செய்வதிலும் என்னபயன் அடையப்போகிறீர் என்றும்உணர்த்துகிறார்.

4 தவம்செய் வதுந்தழல் வேள்வி
முடிப்பதுந் தம்மையொறுத்
தெவன்செய்யு மெய்யன் குருகைப்
பிரானெம்மை யின்னமொரு
பவஞ்செய்கை மாற்றிய பண்டிதன்
வண்டமிழ்ப் பாவுமுண்டே
அவஞ்செய்கை மாற்றச் செவியுண்டு
நாவுண் டறிவுமுண்டே 95

மேல்பாட்டில் தொனியாய்க் கிடக்கும் சில பொருள்கள் கருதத்தக்கன. தமிழ் அறிந்திருந்தாலும் ஆழ்வார் திருவாய்மொழியைத் தெரிந்த ஆசானிடத்தில் பொருள்கேட்டு உணரவேண்டுமென்பதொன்று. திருவாய்மொழியை இனிமையான ராகங்களோடு கலந்துபாடிப் பிறப்பினுலுண்டான மயக்கத்தைத் துடைத்தல் வேண்டும் என்பர், "இயலைத் தொடுத் தின்னிசைபுணர்த் தெம்மை யிப்பிறவி மயலைத் துடைத்தபிரான்". திருவாய்மொழிக்கு மற்றுமொரு ஏற்றம் கூறுவார். எல்லாச் சமயங்களும் ஆழ்வார் அருளால் "பரன் உண்டென்று அறிவுற்றது" என்பர். கம்பநாட்டாழ்வார், திருவாய்மொழியின் அதிரகசியமான கருத்தை நமக்கு 40-வது செய்யுளில் வெளிப்படுத்துகிறார்.

5 காலத்தி லேகுரு கூர்புக்குங்
கைக்கொண் மினேகடைநாள்
ஆலத்தி லேதுயின் ஞேர்கொண்ட
ஐயிரண் டாயமைந்த
கோலத்தி லேமூளைத் துக்கொழுந்
தோடிக் குணங்கடந்த
மூலத்தி லேசெல்ல மூட்டிய
ஞானத்தெம் மூர்த்தியையே. 40

[அதாவது, தசாவதாரத்தில் திருமால்செய்தருளிய விசித்திர மனோஹரங்களாய திவ்விய லீலைகளில் நம் மனது இறங்கி அகப்பட்டு அவனிடத்தில் அன்பு வாய்ந்த பக்தி முளைக்கவேண்டுமென்பது] இம்முளை பருவகாலத்தில் வளர்ந்து கொடிஓடி முக்கணங்களாலமைந்த பிருகிருதி அண்டங்களை அதிக்கிரமித்துக் காரணப்பொருளான ஆதிமூலத்திலே சேர்ப்பிக்குமாகையால் ஆழ்வார் உரைக்கும் ஞானத்தை கைக்கொண்மின்" என்கிறார்.

சடகோபர் அந்தாதியில் 19-வது செய்யுள், திருவாய்மொழியை, அதின் 3-ம் பத்து 4-ம் திருவாய்மொழிபோல் பலவாறுகப் புகழ்கின்றது.

6 சொல்லென்கெ ஞேழு வேதச்
சுருக்கென்கெ ஞேவெவெர்க்கு
நெல்லென்கெ ஞேவுண்ணு நீரென்கெ
ஞேமறை நேர்நிறுக்குங்
கல்லென்கெ ஞேமுதிர் ஞானக்
கனியென்கெ ஞேபுகல
வல்லென்கெ ஞேகுரு கூரெம்பி
ரான்சொன்ன மாலையையே." 19

[திருவாய்மொழியைத் தமிழ்ச்சொல் லென்பேனோ? மாட்டேன். வேதசாரமென்பேனோ? உணவாகும் தானியம் என்பேனோ? குடிக்கும் நீர் என்பேனோ? வேதப்பொருளை அளக்கப் படிக்கல் லென்பேனோ? ஞானச்சுவை முற்றிய பழம் என்பேனோ? எவ்வகையும்கூற உரிமையுண்டென்கிறார்.]

வரகவிகளுக்கு உதயமாகும் சித்திர கற்பனைகள், வேறு வேறுய எப்பொருட்களுக்கும் ஒருவாறு இணை கற்பிக்க வல்லதாயினும், நம்மாழ்வார் அங்ஙனம் அதிசயோக்திக்களைக் கொண்டு ஒரு தத்துவத்தையும் சாதிக்க முயலார். "வானுற ஓங்கும்" என்றுள்ள சாதாரண யுக்திகளும் அவர் பிரபந்தத்தில் காணக் கிடைப்பதரிது. பின்வந்த தமிழ்க் கவிகள் அதிசய கல்பனைகளாலும் உல்லேஹங்களாலும் முயலும் ரசபாகங்கள் இம்மஹான் மனநிகழ்ச்சிக்கு ஒவ்வா.


## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய—கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலிய அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர் பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தர கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு)

மானேஜர்:—"கலாநிலயம்", 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[76-வது பக்கத் தொடர்ச்சி.]

### நடத்தை (Behaviour)

இயற்கையமைப்பானது பிறக்கும்போதே அமைந்துகிடப்பது மட்டும் அன்று. பிறக்கும்போது அமைந்து கிடப்பன சிலபோது இயற்கையமைப்பாவதில்லை. குழந்தை குருடாகப் பிறக்கின்றது; பேதையாகப் பிறக்கின்றது. தாய் வயிற்றில் இருக்கும்போதே கண்ணும் மூளையும் கெட்டுப்போவதால் இவ்வாறு நிகழ்கின்றது. இயற்கையமைப்போ குழந்தை பிறப்பதற்கு ஒன்பது திங்களுக்கு முன்னரே ஆண்கருவுளியும் பெண்கருவுளியும் இணைந்து ஒன்றாய் உருப்பெற்றபோது அமைந்து கிடப்பதாம். ஒருமகன் கரியவனு செம்மை யானவனு, ஆணு பெண்ணு, குள்ளமா உயரமா, அறிவாளியா அறிவிலியா, என்று வேறுபிரித்துக் கூறக்கூடிய இயற்கையமைப்பு அச்சிறு துளியிலேயே மறைந்து கிடக்கின்றது. தாயின் கருவறையில் கிடக்கும்போது செயற்கையால் அறிவடைதற்கோ பயிற்சிக்கோ இடம் இல்லை. அப்போது நிகழ்வதனைத்தும் இயற்கை வளர்ச்சியேயாம். ஆதலின் பிறந்ததும் குழந்தையினிடம் காணப்படுவன இயற்கைச் செயல்களேயாம். மூச்சுவிடுதல், அழுதல், ஒலிகேட்டுத்திடுக்கிடல்,கால் கை நீட்டல், பொருள்களைப் பிடித்தல், பால் குடித்தல், விழுங்குதல், முதலியன இயல்பாக எழும் எதிரூன்றல்களாகும். பிறக்கும்போதே இவற்றிற்குவேண்டிய புலனுறு நரம்பமைப்பும் இயக்க நரம்பமைப்பும் புலனுறப்பும் தசைநாரும் செயலுறுநிலையில் வளர்ச்சிபெற்று விளங்குகின்றன என்பதாயிற்று. ஆனல் இயற்கைச் செயலனைத்தும் பிறந்தஉடனேயே வெளியாகின்றனஎன்று சொல்வதற்கில்லை. பிறந்த பின்னும் இயற்கையமைப்புக்கள் வளர்ந்துகொண்டே போகின்றன. நம் இயற்கையாம், மயிரின்நிறம் மூக்கின் வடிவு முதலியன இயற்கை யமைப்பேயாறுலும் நாம் முதிர்ந்து வளர்கிற வரையில் நன்கு விளங்குவதில்லை. நம் முதிர்ச்சிதான் என்னை; இவ்வியற்கை யமைப்பின் வளர்ச்சியே யன்றோ? இவ்வாறே அகவுறுப்புக்களாகிய நரம்பு அமைப்புக்கள் முதலியனவும் வளர்கின்றன. பயிற்சியா லறிந்துகொள்ளப்படாதவை அனைத்தும் இயற்கைச்செயல்கள் எனலாம்.

பறவை பறப்பது இயற்கையா செயற்கையா? தம் தாய்ப்பறவை பறப்பதுகண்டு குஞ்சுகள் பறக்கக் கற்றுக் கொள்கின்றன என்றும் சொல்லக் கூடுமன்றோ? செய்காட்சியால் (Experiment) இதனுண்மையைக் கண்டறியவேண்டிக் குஞ்சு பொறித்தவுடனேயே ஒரு குஞ்சினை எடுத்து ஒரு சிறிய பெட்டிக்குள் அடைத்து வைத்தனர். பறக்கும் காலம் வந்ததும் அதனை எடுத்து வெளியில் விட்டபோது அது பறந்தோடிப் போயிற்றும். எனவே பறப்பது இயற்கைச் செயலேஎன விளங்கியது; பாடும் பறவையின் குஞ்சு ஒன்றினை இவ்வாறே வேறுபிரித்துத் தனியே வளர்த்தனர். சிலநாள் கழிந்தபின் அது பாடத்தொடங்கியது. ஆனல் சில இயற்கை ஒலிகளையே எழுப்பியது. இவ்வொலிகளின் தொடர்ச்சியும் இயைபும் புதியனவாக விளங்கின. எனவே, ஒலியும் பாட்டும் இயற்கைச் செயலாறுலும் அவ்வொலியின் தொடர்ச்சியும் இயைபும் தாய்ப்பறவையினிடத்திருந்தும் பயிற்சியால் கற்றுக்கொள்ளப்படுகின்றன என்பது விளங்குகிறது. இவ்வாறே மக்களது குழந்தைகளும் சில ஒலிகளை எழுப்பும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றன. ஒரு பேச்சாகப் பேசும் அவ்வொலியின் தொடர்ச்சியோ பயிற்சியால் நாம் அறியும் செயற்கையமைப்பாகும். நாம் பேசுகின்ற மொழியை யன்றோ குழந்தையும் பேசுகின்றது.

நாம் நடப்பது இயற்கையா, பயிற்சியா? நடைவண்டி ஒன்று கொண்டு குழந்தைக்கு நடை கற்பிக்கின்றோம். அனல் உண்மையில் நாம் கற்பிக்கவோ குழந்தை நடை கற்கின்றது. ஏழுதிங்கள் சென்ற ஒரு பெண்குழந்தை நிற்கமுயன்றது. அக்குழவியின் கால் சிறுத்திருந்ததால் அதனைப் படுக்கையிலேயே கிடத்திவைக்க வேண்டுமென்று மருத்துவர் கட்டளையிட்டார். நான்கு திங்கள் வரையில் இவ்வாறே அக்குழவி கிடந்து பின்னர்த் தானே எழுந்து நடந்ததாம். எனவே நடை இயற்கைச் செயலேயாம். ஆனல் நடக்கப் பழகுதல்தான் என்னை? நடப்பதற்கு தக்க நிலையில் தசைநார்களும் எலும்புகளும் முற்றியபோது அதற்கேற்ற நரம்பமைப்புகளும் வளர்ச்சியைப் பெறுகின்றன. ஆனல் நரம்புக் கூடல்வாய்கள் வளர்ந்து முற்றுவதில்லைபோலும். ஆகையால் சிறிதுபொழுது வரை நரம்பமைப்பானது திருத்தமாகச் செயலுறுவதில்லை. இவை வளர்ந்து முற்றுங்காலமே நடைபழகுங் காலமாகும்.

செயற்கையின் பயிற்சியால் அறிந்துகொள்ளுவதற்கு இடமில்லாதபோது தோன்றுவன எல்லாம் இயற்கைச்செயல்கள் என்பதாயிற்று. ஆனல் பயிற்சியாலேயே பலவும் கற்று மெல்ல வளர்ந்து முற்றும். மக்களைப் பொறுத்த அளவில் இச்சிறப்பியல்பு ஆராய்ச்சிக்குப் பயன்படுவதில்லை. ஆகையால் இயற்கைச் செயலின் மற்றொரு சிறப்பியல்பை நாம் கண்டறிதல் வேண்டும். இனத்திற்கெல்லாம் பொதுவாகி நிற்றல், இயற்கைச்செயலின் மற்றொரு சிறப்பியல்பாம். இனத்தின் பொதுத்தன்மையே இயற்கைச் செயனிலையாம். ஆனல் மலேயாநாட்டில் வாழ்பவர் அனைவரும் புகை குடிக்கின்றனர். இவ்வழக்கம் அமெரிக்கா நாட்டினின்றும் பரவியதொன்றாகும். தப்பெண்ணங்களும் மக்களிடை பரவுகின்றன. மூத்தோரிடம் இருந்து இவற்றை மக்கள் அறிந்துகொள்கின்றனர். ஆதலின் இத்தகையன இயற்கைச் செயல்கள் ஆவது இல்லையாம். அன்றியும் சில இடங்களில் இயற்கை யமைப்பனைத்தையும் அவ்வினத்திற்குப் பொது என்று சொல்லமுடியாது. கண்ணின் நிறம் இயற்கையமைப்பே யாறுலும் ஓர் இனத்தைச் சேர்ந்தவ ரனைவர்க்கும் அக்கண்ணிறம் ஒரே வகையாக அமைவதில்லை. திருவருட் புலமையும் (Genius)

இயற்கையமைப்பே யாகும். ஆனல் அனைவருக்கும் பொதுவான தன்மை இதுவன்று. சில இயற்கையமைப்புகள் அனைவரிடமும் காணக்கிடக்கின்றன; சிலவோ அங்கும் இங்கும் சிற்சிலரிடத்தே காணக்கிடக்கின்றன.

செயற்கை அமைப்புக்களோ தனித்தனி மக்களின் சிறப்பியல்புகளாக விளங்குகின்றன; அவை பொதுத் தன்மையல்ல; சுற்றி நின்ற புறநிலைக்குத் தக்கபடி திருத்தியமைத்தனவாகும். இயற்கையமைப்பைத் திருத்தியமைத்தலே செயற்கையமைப்பாகும். இயற்கையமைப்பு ஒன்றுபோதும், புறநிலைக்குத் தக்கவாறு திருத்தியமைத்தலும் (adjustments) வேறுபடுகின்றது. மக்கள் நடக்கும் நடை வேறுபடுவதைக் காண்க.

இயற்கைச் செயலாவது இயல்பான நடத்தையாகிப் பயிற்சியால் காமறியும் பழக்கத்திற்கு எதிர்மறையானதாகும். புழுவினின்றும் வெளிவந்த குளவி முட்டையிட வளை தோண்டுகிறது. இதனைத் தன் மூத்தோரின் நின்றும் அறியவில்லை. தான் என் கூண்டு கட்டுகின்றதென்பதனையும் அஃது உணருவதில்லை. ஆதலின் அதன் செயல் அறிவுச்செயலும் அன்று, பழக்கச்செயலும் அன்று, இயற்கைச் செயலேயாம். இயற்கையமைப்பே இச்செயலைச் செய்ய அதனை உந்துகிறது. குழந்தை பாலுண்பதும் அங்ஙனமே. பாலுண்ண முன் பின் பயின்றதில்லை; பாலுண்பதன் பயனையும் அஃது அறிந்ததில்லை. வெவ்வேறு உயிருளிகள் வெவ்வேறு இயற்கைச் செயல்களோடும் விளங்குகின்றன. இவ்வேற்றுமை அவ்வவற்றிற்கு அமைந்துகிடக்கும் நரம்பமைப்புப்புலனுறுப்புத்தசை நாரமைப்பு என்றவற்றால் ஆகியதே என்க. புலனுருப்புகளுக்கும் இயற்கைச் செயல்களுக்கும் உள்ள தொடர்பினைப் பலவிடத்துக் காண்கிறோம். மோப்பம் பிடிக்கும் நாயின் இயற்கைச்செயல் அதன் கூரிய மூக்குப் புலனுணர்வைப் பொறுத்திருக்கிறது. தேனீக்கள் காலால் சுவையுணர்ந்து தம் இயற்கைச் செயல்களைப் புரிகின்றனவாம். மீன்கள் இருபுறத்தும் புலனுறுப் புடையனவாய் நீரோட்டத்தால் தாக்கப்பெற்று நீரோட்டத்தோடு ஓடுகின்றன. இயக்கவுறுப்பமைப்பிற்கும் இயற்கைச்செயலுக்குமுள்ள தொடர்பினைப் பறவைகள் நன்கு விளக்குகின்றன. இயற்கையில்லாமற்போனல் பறத்தலென்ற இயற்கைச்செயல் எவ்வாறு நிகழும். ஆனல் நரம்பமைப்பே இவற்றை எல்லாம் விட இன்றியமையாததாகும். புலனுறுப்புக்களும் இயக்கவுறுப்புக்களும் குறிப்பிட்ட ஒருவழியில் இயைபுபெற்ற நரப்பங்களோடு தொடர்புண்டு கிடப்பதே இயற்கை யமைப்பாகும். இவ்வமைப்பின் பயனகச் சில பொருள்களைக் கண்டபோது சில செயல்கள் தொடர்ந்தெழுகின்றன. இயற்கைச் செயல்கள் தடைபட, எதிரூன்றல்களாகும் அவை, முடிவான எதிரூன்றல்களுக்கு முன்னேற்பாடாய் அமைந்த பண்ணுறுத்தும் எதிரூன்றல்களாகவும் விளங்குகின்றன. இயற்கைச் செயல்களைப் பல உயிருளிகளிடையும் கண்டபின் அவற்றின் இயல்பினை மேலும் ஆராய்வோம். கீழ்நிலையில் உள்ள உயிருளிகளிடை நடத்தையனைத்தும் இயற்கைச் செயல்களாக விளங்குதலின் இதனைப்பற்றி ஒரு சிறிது இங்குக் கூறவேண்டியதாயிற்று.

இயற்கைச் செயலாவது நோக்கமுடையதாய் முன் நுகர்ச்சி (Previous Experience) இன்றியே செய்யப்படுவதாகும். அறிவுச் செயல்களோ பழைய நுகர்ச்சியினைப் பயன்படுத்திக்கொண்டு செய்யும் செயல்களாம். கூடுகண்ட பூனை நீயினை அஞ்சுவது அத்தகையதாம். இயற்கைச் செயனிலை (Instinct) ஆவது நோக்கமுடைய செயல்களை இயற்ற நமக்கு இயல்பாக உள்ளதோர் ஆற்றலாகும். அறிவுநிலையோ, பண்டைய நுகர்ச்சியின் பயனாக அவ்வியற்கைச் செயலினைத் திருத்தும் ஓர் ஆற்றலாம்.

கீழ்நிலையி லுள்ள உயிருளிகளை ஆராய்ந்தோம். மேலே பூச்சிகள் (Insects) விளங்குகின்றன. இவற்றினிடையேதான் இயற்கைச்செயல் நன்கு புலனாகிறது. திருப்பக்கொள்கையினர் இவற்றையே ஆராய்கின்றனராதலின், இவற்றின் செயல் 'நடத்தையா' என நாமும் ஆராய்தல் வேண்டும். பூச்சிகளில் பல முட்டையிலிருந்து வெளிவந்ததும் புழுவாய் விளங்கிப் பின் சிலநாள் சென்றதும் பூச்சியாக மாறுகின்றன. ஒருவகை விட்டில் புழுநிலை மாறிப் பூச்சிநிலையடைந்ததும் முட்டையிடத் தொடங்குகின்றது. இரவில் மலரும் ஒருவகைப் பூவில் (Yucca) தான் முட்டையிடுகின்றது. அப்பூவின் மலர்ப்பொடியை ஒரு பூவினின்றும் எடுத்து ஒரு உண்டையாக்கித் தலையில் இடுக்கிக்கொண்டு செல்கிறது. மற்றொரு பூவைக்கண்டு, அதன் அல்லித்தாளைத் துளைத்து அம்மலர்க்கருவிடை முட்டைகளை இடுகின்றது. பின்னர் அதன் வாயைத் தான் கொணர்ந்த சிற்றுண்டையால் அடைத்துவிடுகின்றது. முட்டைகள் எங்கே வளருமோ அங்கேயே இடுகின்றதை நாம் உற்று நோக்குதல் வேண்டும். முட்டை பொரிந்ததும் புழுவிற்குத் தீனி வேண்டுமன்றோ? அதற்குத் தீனி இச்செடியின் காயேயாம். பூவானது காயாக மாற வேண்டும். காயாக மாறுவதற்கோ, ஒருபூவின் மலர்க்கருவியின்மேல் மற்றோர் பூவின் மலர்ப்பொடி படுதல் வேண்டும். இதுபற்றி அவ்விட்டில் மலர்ப்பொடியாகிய சிறு உண்டையைக் கொண்டுவந்து உள்நுழைக்கின்றது. முட்டையிடுகின்ற இடமோ மலர்க்கருவினிடையேதான். புழுநிலைநின்று நீங்கிய உடனேயே அவ்விட்டில் மலரைப்பற்றியோ தன்னைப்பற்றியோ அறிவதற்கு முன்னரே இனத்தைக் காக்கும் இச்செயல்கள் அத்துணையையும் செய்து முடிக்கின்றது.



# அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

## v. சோழரும் சைவரும்

69 வது பக்கத் தொடர்ச்சி.

சோழ ராஜதானிப் பட்டணமானது பற்பல காலங்களில் பற்பல நகரங்களாக இருந்தன வென்பது நமது தென்னிந்திய தேச சரித்திர வரலாறும். உறையூர், காவிரிப்பூம் பட்டணம், கருவூர், காஞ்சிபுரம், முதலியன சோழனுக்குப் பிரதான பட்டணங்களாயிருந்தன. பெரியபுராணத்தில் யாதேனுமோர் அடியார்சரிதையில் சோழராஜதானிப் பட்டணம் அவ்வடியார் காலத்தில் இன்னவூர் என்று குறிக்குமாயின் அதைக்கொண்டு அவ்வடியார்காலம் நிர்ணயிக்கலாகும். தஞ்சையிலும் சோழன் அரசாண்டான். அக்காலத்திலேயே செருத்துணை அரசியலையும் காட்டவேண்டும். கருவூர்யுத்தம் நடந்தபோது அங்கே புகழ்ச்சோழன் இறந்தான் என்றால், கருவூர் யுத்தத்தாலே இவ்வடியார் காலம் குறிப்பிடலாகும்.

"இலை மலிந்த வேனம்பி யெறிபத்தர்" கருவூரில் வசித்திருந்தகாலம் மேற்கண்ட கருவூர் யுத்தத்திற்குப் பிற்பட்டதென்றே மொழியவேண்டும். சம்பந்தர் காலத்திற்கு முற்பட்டவர் எறிபத்தர் என்று அனுமானிப்பதற்குத் தேவாரத்தில் சில சொற்றொடர்கள் இடங்கொடுக்கின்றன *. சேக்கிழார்,

"மழைவள ருலகி லெங்கு மன்னிய சைவ மோங்க
அழலவிர் சடையா னன்பர்க் கடாதன வடுத்த போது
முழையரி யென்னத் தோன்றி முரண்கெட வெறிந்து
[தீர்க்கும்
பழமறை பரசுந் தூய பரசுமுன் னெடுக்கப் பெற்றார்"

என்பதால், அக்காலத்தில் எறிபத்தநாயனர் சைவத்தைக் கருவூரில் வளர்த்துவந்தனர் என்பது தெரியவருகின்றது. இவரால் ஏற்பட்டது ஆனிலை யென்னும் அவ்வூர்த் திருக்கோயிலாகும். இக்கோயிலின் காலம் சம்பந்தர் காலத்திற்கு முன்னும் கருவூர் யுத்தத்திற்குப் பின்னும் என அனுமானிக்க நேர்வதில் கி. பி. 3 அல்லது 4-ம் நூற்றாண்டென்று எண்ணல் வேண்டும். முன்சொல்லியவாறு இச் சிவனடியாரும் பெரிய போர்வீரரென்றே காணப்படுகின்றார். இன்றேல், ஒரு யானையைக் கொன்றதுடன் பல வீரர்களையும் ஏககாலத்தில் அதனுடன் வெட்டி வீழ்த்தல், இவரால் இயலுமோ? அந்த யானை, சிவபக்தரான சோழன் பட்டயானையென்று காணப்படுதலால் அக்காலத்தில் கருவூர், சோழனுக்கு ராஜதானிப்பட்டணமெனக் காணப்படுகின்றது.

புகழ்ச்சோழன்முதல் சோழராஜ்ஜியம் அரசாண்ட சோழர்கள் பலர் சைவமதத்தில் மிகவும் ஈடுபட்டுச் சைவப்பற்றும் ஒற்றுமையும் எங்கும் பரவச் செய்தனர். இதனுல் மருதநில மக்கள் மாத்திரமல்லாமல் ஏனைய நிலமக்களும் சைவராயினர். குறிஞ்சியிலுள்ள வேடர்கள் சைவத்தில் ஈடுபட்டதைக் கண்ணப்பர் புராணமும், பறந்தலையிலுள்ள மறவர் எயினர் ஏனாதிகள் சைவப்பற்று அடைந்ததை ஏனாதிநாதனுடைய புராணமும் நன்கு விளக்கும். சிவபெருமானிடத்தில் உள்ள பற்று, இல்லத்தில் எதன் பேரிலும் சிவனடியார்க்கு * இல்லையென்பதைக் குங்கிலியக் கலயநாயனர் புராணம் விளக்கும். மனையாள் தாலியை விற்றுக் குங்கிலியம் வாங்கித் திருக்கோயிலில் பெருமானுக்குப் புகை சமர்ப்பித்த இவர் திருப்பனந்தாள் லிங்கத்தைக் கழுத்தில் கயிறுகட்டி யிழுத்து நிமிர்ப்பித்த அடையாளம் இன்றும் காணப்படும். இது கட்டுக்கதை யன்று. உலகத்தில் இயற்கைப் பொருள்கள் ஜடசக்திகளின்வயமாய்ச் சில சட்டதிட்டங்களுக்கு அடங்குகின்ற அவற்றையே அறிவியல் நூலார் இயற்கைச் சட்டங்கள் என்று பெயரிட்டு வந்தனர். உதாரணம்:—மேலே ஒரு பொருளை ஆகாயத்தில் எறிந்திட்டபின் அது தரையில் வீழ்வது, இயற்கைச் சக்தியான பூமியின் ஆகர்ஷண சக்தி விளக்கமாம். எந்த வஸ்துவும் மேலே எறிந்தால் கீழே விழாது தடுக்க ஏனைய ஜடசக்திகளாலும் (தற்காலத்தில் ஐரோப்பியர்களாலும் ஆமோதிக்கப்பட்ட) மனோ சக்தியாலும் இயலும்; ஆனல் ஜடசக்தியால் தடுப்போமானல் பிரத்தியக்ஷ பிரமாணத்தால் நிரூபிக்கப்படும். மனோசக்தி முதலிய அறிவுச்சக்திகளால் தடுப்பின் அனுமானத்தால் காணக்கூடுமே யொழியக் கட்புலனல் காணலாகாது. மனோசக்தி அகண்டாகாரமாய் வாய்ந்த சிவனடியார்கள் நமது தமிழ்நாட்டில் நல்லரசின்பயனல் ஓர் வகுப்பினரைச் சாராது பற்பல ஜாதி தொழில் பேதங்கள் உடையவர்களாய், அரசன்முதல் ஆண்டிவரையில் உள்ள நிலைகளில் நிறைந்திருந்ததாலே திருநெறி பிறங்கலாயிற்று.

## vi அடியார்களில் குலவேறுபாடு உளதேனும் குணவேறுபாடு இன்மை.

வேளாள குலத்துப் பிறந்தவர் அரிவாட்ட நாயனர். அக்குலத்திற்குக் கூலித்தொழில் இழிவானதாயிருந்தும் நெல்லறுத்துக் கூலிநெல்லால் சிவபெருமானுக்கு அமுதளித்துவந்தனராக நிலவெடிப்பில் நெல்விழுந்து மறையவே சிவபெருமானிடம் அன்பு செலுத்த இயலாத அத்தினமே தனக்கு முடிவுநாளாகவேண்டுமென்று அரிவாளால் கழுத்தை அரிந்துகொண்ட அன்பும், திருக்குறிப்புத்தொண்டர் தனது தலையைக் கல்லில் மோதிய அன்பும் ஒன்றேயாம். வண்ணார் குலத்தில் அடியார் காணப்படுவதுபோல், ஆயர் குலத்திலும் உளர் என்பது காட்டும்வகை ஆனாய நாயனர் புராணம் சேக்கிழார் கூறினர். ஆயினும் தற்காலத்தில் "இடையரில் ஆண்டியில்லை, குயவனில் தாதனில்லை" என்கின்ற பழமொழி வழங்குகின்றது. அதாவது இடையர் அல்லது யாதவர் என்னும் குலத்தோர் முழுவதும் வைணவர்களாம். அதுபோலவே குயவர்குலம் முழுவதும் சைவராம். இது சென்னைக்கும் அதைச்சேர்ந்த மாகாணங்களுக்கும் உண்மையோ அன்றோ என்பது அறிஞர் ஆராய்க. அஃது அடியேன் சிற்றறிவிற்கு எட்டவில்லை.

---

* தொண்டெலாமலர் தூவியேத்தநஞ்
சுண்டலாருயி ராயதன்மையர்
கண்டனார்கரு வூருளானிலை
அண்டனாரரு ளீயுமன்பரே.
புத்தர்புன்சம ணாதர்பொய்யுரைப்
பித்தர்பேசிய பேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கரு வூருளானிலை
அத்தர்பாத மடைந்துவாழ்மினே. சம்பந்தர்.

* அப்பனீ அம்மைநீ அன்புடைய மாமனும் மாமியும் நீ
அப்பர்.

# தமிழ்ப் பாடம் 107.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[71-வது பக்கத் தொடர்ச்சி.]

### கிருஷ்ணன் தூதச் சருக்கம்.

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா டென்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு
திறத்தேமுஞ் சென்று மாள்வோம்
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்த வாழ
உயிரனையாய் சந்துபட வுரைத்தருளென்
றுனறத்தி னுருவம் போல்வான். (5)

உங்கள் கருத்து யாதென்று கேட்ட கண்ணனுக்குத் தருமன் போரின்றி நாடுபெறவுபாயம் கூறவேண்டுமென்று கேட்டல்.

பதவுரை.

உயிர் அனையாய் - எங்களுக்கு உயிர் போன்ற கிருஷ்ணனே! வயிரம் எனும் - பகையாகிய இந்த, கடு நெருப்பை - கொடிய நெருப்பை, மிக - அதிகமாக, மூட்டி - மூட்டி, வளர்க்கின் - வளர்ப்போமானால், உயர் - உயர்ந்த, வரை - மலையிலுள்ள, காடு என்ன - காட்டைப்போல், செயிர் - குற்றமுடைய, அமரில் - யுத்தத்தில், வெகுளி - கோபத்துடன், பொர - போர்செய்து, இருதிறத்தேமும் - இரண்டு பக்கத்தாரும், சேர - சேர்ந்து, சென்று மாள்வோம் - போய் இறப்போம். (ஆகையால்)

கயிரவமும் - ஆம்பல் மலரும், தாமரையும் - தாமரைமலரும், கமழ் - சேர்ந்து மணக்கின்ற, பழனம் - வயல்களை உடைய, குருநாட்டில் - குருநாட்டில், கலந்துவாழ - (நாங்களும் துரியோதனுதியர்களும்) சேர்ந்து வாழும்படி, சந்துபட - எங்கள் இருவருக்கும் உள்ள பிளவு நெருங்கி நாங்கள் ஒன்றுகச் சேரும் வண்ணம், உரைத்தருள் - சொல்லி அருள்வாயாக; என்றுன் அறத்தின் உருவம் போல்வான்-என்று தருமமே ஓர் வடிவம் எடுத்து வந்ததை ஒத்த உதிட்டிரன் கூறினன்.

---

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்வென்
றவந்நா ளவன்றான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர் வெய்யோ னுங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தா
லாங்கவனைக் கொன்று போரி
லிருநிலத்தை யாளவினித் துணிவதே
கடனென்று னெம்பி ரானே. (6)

சமாதானஞ் செய்து வைப்பாய் என்றுரைத்த தருமனுக்குக் கிருஷ்ணன் கூறிய மறுமொழி.

பதவுரை.

அரவு-பாம்பினது வடிவம் எழுதியுள்ள கொடியை, உயர்த்தோனுடன்- தூக்கியுள்ளவனுகிய துரியோதனனுடன், மறுசூது ஆடி - இரண்டாம் முறை சூது ஆடி, நீர் வென்ற - நீங்கள் செயித்து அடிமையைத் தீர்த்துக் கொண்ட, அந்நாள் - அத்தினத்தில், அவன்தான் - அந்தத் துரியோதனன் சொன்ன - சொல்லியிருந்த, விரதமொழி - கட்டளையை, தவிராமல் - கடவாமல், வெங்கானம் - கொடிய காட்டுக்கு, போய்மீண்டீர் - போய்வந்நீர். (ஆகையால்)

வெய்யோன் - அந்தக் கொடியவன், குருநிலத்தில் உங்கள் பாதி - குருநிலத்தில் உங்களுக்கு உரிய பாதியை, இனிக் கொடாதிருந்தால் - இனியும் கொடுக்காமல் இருப்பானுனல், (ஆங்கு - அசை) அவனை-அவனை, போரில் கொன்று - யுத்தத்தில் கொன்று, இருநிலத்தை - இப்பெரிய உலகத்தை (அல்லது இருவருடைய பாகத்தையும்) இனி - இதன்மேல், ஆள - நீங்களே ஆள, துணிவதே - நிச்சயங் கொள்வதே, கடன் - கடமையாகும்; என்றுன் எம்பிரான் - என்று எமது இறைவனுகிய கண்ணன் கூறினன்.

---

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய
துணைவரையுங் கொன்று போர்வென்
றாவநெடுங் கடலாடை யவனியெலாந்
தனியாளு மரசு தன்னிற்
கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறு
மிரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்த லினிது நன்றே. (7)

போர்செய்து உங்கள்நாட்டைப் பெறுவதே தக்கது என்ற கிருஷ்ணனுக்குத் தருமன் எதிருரைத்தது.

பதவுரை.

குரவரையும் - (பீஷ்மன் விதுரன் முதலிய) பெரியோர்களையும்; கிளைஞரையும் - (துரியோதனுதியர், சகுனி முதலிய) உறவினர்களையும்; குலத்து - நமது குலத்திற்கு, உரிய - உரியவர்களாகிய, துணைவரையும் - (கிருபன், துரோணன், அசுவத்தாமன் முதலிய) துணைவர்களையும், கொன்று - கொன்று, போர் - யுத்தத்தில், வென்று - செயித்து,

ஆரவம் - சப்தம் செய்கின்ற, நெடும் - பெரிய, கடல் - கடலை, ஆடை - ஆடையாக உடுத்திருக்கிற, அவனி எல்லாம் - இந்தப் பூமிமுழுவதும், தனி-நாம் தனியாக, ஆளும் - (ஆளவேண்டுமெனின், அவ்வாறு) ஆள்கின்ற, அரசுதன்னின் - அந்த அரசாட்சியைக் காட்டிலும்,

கரவு - வஞ்சனை, உறையும் - பொருந்திய, மனம் - மனத்தையுடைய, தாதை - எமது பெரிய தந்தையாகிய திருதராட்டிரன், முனிக்கு - சஞ்சய முனிவனிடத்தில், உரைத்த- சொல்லியனுப்பிய, மொழிப்படியே - (நன்னெறிக்குரிய) மொழியின்படியே,

கானம்தோறும் - காடுகளில், இரவுபகல் - இரவிலும் பகலிலும், பலம் - பழங்களையும், மூலம் - கிழங்குகளையும், சாகம் - தழைகளையும், நுகர்ந்து -தின்று, உயிர் வாழ்தல் - நாம் பிழைப்பது, இனிது நன்றே - மிகவும் நல்லது (என்பதற் கையமில்லை).

---



கோதிலா னிந்தமொழி கூறுதலு
மாமாயன் கூற லுற்றுன்
மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றல்
பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ
நீதியோ வெனவுரைத்தா னங்கதற்கு
நிகழ்தரும னிகழ்த்த லுற்றுன். (8)

போரில்லாது பெற இயலாதாயின் அவ்வரசு வேண்டா வென்ற தருமனைக் கண்ணன் போரிற்குத் தூண்டுதல்.

பதவுரை.

கோது இல்லான் - குற்றம் இல்லாதவனுகிய தருமன், இந்தமொழி - முன்சொன்ன வார்த்தைகளை, கூறுதலும் - சொல்லவே, மா மாயன்—பெரிய மாயனுகிய கண்ணன், கூறலுற்றுன் - பதில்கூறத் தொடங்கினவனாய்,

மோது - மோதுகின்ற, அமருக்கு - யுத்தத்தைச் செய்யாமல், இளைத்து - பின்னிட்டு, நீர் - நீங்கள், மொய்த்த - அடர்ந்த, பெரும் - பெரிய, கானகத்து - காட்டிற்குள்; முடுகிச் சென்றல் - புகுந்துகொண்டால், பூதலத்தோர் - இப்பூமியிலுள்ளவர்கள், ஏசாரோ - உங்களைப் பழித்து இகழமாட்டார்களா! புகன்ற-(திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் நீங்கள்) விளம்பியுள்ள, பெரு - பெரிய, வஞ்சினமும் - சபதமும், பொய்த்திடாதோ - நிறைவேறுமல் பொய்யாகி விடாதோ! நீதியோ -க்ஷத்திரியர்களுக்கு இது தருமம் ஆகுமோ! என உரைத்தான் - என்று சொன்னன்.

ஆங்கு - அப்பொழுது, அதற்கு - அம்மொழிகளுக்கு, நிகழ் - விளங்குகின்ற,தருமன் - தருமராஜன், நிகழ்த்தல் உற்றுன் - (பின்வருமாறு) பதில் சொல்வானுனன்.

விரிவுரை:—துகிலுரிந்த துச்சாதனன் இரத்தத்தை அள்ளிக் குடிக்கும்வரையில் தன் கைகளிலெடுத்து நீர் பருகுவதில்லை யென்று வீமனும், துரியோதனுதியர் செத்து வீழ்கின்றவரையில் தன் கூந்தலை முடிப்பதில்லை என்று திரௌபதியும், இதுபோன்று ஒவ்வொன்று (தருமன் தவிர) பாண்டவர்களில் மற்றவரும் செய்துகொண்ட சபதங்கள் இங்குக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

### இலக்கணம்.

நிலைமொழியிறுதி உகரமாயிருக்க, வருமொழி முதலில் இடையினத்தைச் சேர்ந்த யகரமெய் வருமாயின், அவ்வுகரம் இகரமாகத் திரிந்து (சில முற்றியலுகரங்கள் திரியாமலும்)புணர்கின்ற விதங்களை முன்னர்க் கண்டோம். இனி, உகரஈறும் யகரமுதலுமாய்த் தொடர்வன வல்லாமல், மற்றபடி,

III. C. நிலைமொழி யிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெல்லின மெய்யேனும் இடையின மெய்யேனும் (அதாவது இவ்வின உயிர்மெய் யெழுத்துக்கள்) வருமாயின் அவை எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

ங ஞ ண ந ம ன, என்னும் ஆறு மெல்லினமெய்களில் மொழிக்கு முதலில் வரக்கூடியன, ஞ ந ம என்னும் மூன்று எழுத்துக்களே. ய ர ல வ ழ ள என்னும் ஆறு இடையினமெய்களில் மொழிக்குமுதலில் வரக்கூடியன ய வ என்னும் இரண்டு எழுத்துக்கள்.

i. நிலைமொழி யிறுதியில் உயிர் இருக்க,வருமொழி முதலில் ஞ ந ம ய வ என்னும் எழுத்துக்களாலாகிய எந்த உயிர்மெய் வரினும் அச்சொற்கள் இயற்கையாய்ப் புணரும்—அதாவது எந்த எழுத்தும் தோன்றுது, திரியாது, கெடாது:—

வந்த + ஞண்டு = வந்தஞண்டு.
வேட்டை + நாய் = வேட்டைநாய்.
கொடி + மாடம் = கொடிமாடம்.
வெள்ளி + யானை = வெள்ளியானை.
தீ + வைத்தான் = தீவைத்தான்.

ii. தமிழில் நொ, து என்று இரண்டு ஓரெழுத்தொருமொழிகள் இருக்கின்றன. நொ, என்றுல் வருத்தப்படு, என்பது அர்த்தமாம். அவன் வறுமையால் நொந்தான், எனவருவது யாவரும் அறிவர். து என்பதற்கு உண், என்பது அர்த்தம்.

இந்த, நொ, து என்றசொற்கள் (வருந்தக்கடவாய் உண்ணக்கடவாய் என்று கட்டளையிடுகின்ற பொருளில்) நிலைமொழியாயிருக்க, வருமொழி முதலில் ஞ ந ம ய வ என்னும் எழுத்துக்களில் எது வருமாயினும், இச்சொற்கள் புணரும்போது, ஞ ந ம ய வக்களில் எந்த எழுத்து வருகின்றதோ அந்த மெய் மிகும்.

து + ஞிமிறு = துஞ்ஞிமிறு = (வண்டே நீ உண்ணக் கடவாய்)
நொ + ஞமலி = நொஞ்ஞமலி = (நாயே நீ வருந்தக் கடவாய்)
து + நங்காய் = துந்நங்காய்
நொ + நிருப = நொந்நிருப
து + முனிவா = தும்முனிவா
நொ + மைந்தா = நொம்மைந்தா
து + யுவனே = துய்யுவனே
நொ + யோகி = நொய்யோகி
து + வீர = துவ்வீர
நொ + வேந்தே = நொவ்வேந்தே

189089

இவ்வுதாரணங்களினுல், வருமொழி முதலில் எந்த மெய் வந்ததோ அந்தமெய் மிகுந்து சொற்கள் புணர்ந்திருப்பதைக் காணலாம்.

iii. பூ என்னும் ஓரெழுத்தொருமொழி நிலைமொழியாகவும், ந அல்லது ம என்னும் வரிசையைச் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வருமொழி முதலாகவும் இருக்குமாயின், அந்த நகர மகர மெய்கள் மிகுந்தும் புணரலாம், மிகமால் இயல்பாகவும் புணரலாம்.

பூ + நனி = பூந்நனி எனவும் வரலாம், அல்லது பூநனி எனவும் வரலாம்.
பூ + முரி = பூம்முரி எனவும் வரலாம், அல்லது பூமுரி எனவும் வரலாம்.

iv. (ஐந்து, அழகு, கோழை என்பன, ஐ என்னும் ஓரெழுத்தொருமொழியின் பொருள்) ஐ என்னும் ஓரெழுத்து ஒருமொழியாகிலும், அல்லது ஐயோடுகூடி, கை மை தை என்பனபோல் வரும் உயிர்மெய் ஓரெழுத்தொருமொழியாகிலும் நிலைமொழியாயிருக்க, வருமொழிமுதலில் ஞ ந ம என்னும் மெல்லினம் வருமாயின், அந்த மெல்லினமெய் மிகும்.

ஐ + முகம் = ஐம்முகம்
ஐ + நெகிழ்ந்தது = ஐந்நெகிழ்ந்தது
கை + நீட்டினன் = கைந்நீட்டினன்
மை + மிளிர்ந்தது = மைம்மிளிர்ந்தது
கை + ஞெகிழ்ந்தது = கைஞ்ஞெகிழ்ந்தது
தை + மாதம் = தைம்மாதம்

V. நிலைமொழி ஐ, கை, மை போன்ற ஓரெழுத் தொருமொழிகளாயிருக்க, வருமொழி முதலில் இணையினத்தைச் சேர்ந்த யகரம் வருமாயின், அந்த யகரமெய் மிகும்; வகரம் வருமாயின் அந்த வகரமெய் மிகாது.

ஐ + யாறு = ஐய்யாறு
கை + யானை = கைய்யானை
மை + யானை = மைய்யானை
} யகர மெய் மிகுந்தன.

ஐ + வேல் = ஐவேல்
கை + விலை = கைவிலை
மை + வரை = மைவரை
} வகர மெய் மிகவில்லை.

டால்ஸ்டாய் எழுதியது

# சூரத்து நகரிலுள்ள ஓர் காப்பிக்கடை.

## "A Coffee House in Surat" by Count leo Tolstoy

சூரத்துநகரில் உள்ள ஒரு காப்பிக்கடையில் உலகத்தின் பல பாகங்களிலிருந்து வந்துள மாந்தர் பலர் ஒன்றாய்ச் சந்திப்பதும் வார்த்தை யாடுவதும் வழக்கம்.

ஒருநாள் பாரசீக வாசியான மதசாஸ்திர நிபுணன் ஒருவன் இக்கடை வந்துசேர்ந்தான். இப்பாரசீகவாசி தன்வாழ்நாளின் பெரும்பாகத்தை மத ஆராய்ச்சியில் செலவிட்டவன். கடவுளது தன்மையும், மாந்தருக்கும் கடவுளுக்கு முள்ள தொடர்பையும் பற்றிச் சிந்திப்பதும், எழுதுவதுமா யிருந்தான். அவன் ஆராய்ச்சி அதிகமாகஅதிகமாகப் புத்தியும் மழுங்கலாயிற்று. கடவுள் ஒருவர் இருக்கின்றாரோ வென்ற ஐயமும் பிறந்து,வரவரக் கடவுளுக்கே குழிதோண்டிவிட்டான். ஈதறிந்த பாரசீகத்தரசரான ஷா, அவனைத் தேசப்பிரஷ்டம் செய்தார். ஆகவே அவன் தன்னூடுதுறந்து இந்தியா வந்துசேர்ந்தனன்.

தன் ஆயுள் நாளெல்லாம், பிரபஞ்சத்தின் முதற்காரணம் யாதெனத் தேடப்புகுவான் முயன்று, தீராச் சந்தேகத்தில் தன்னை முடித்துக்கொண்ட இவன், செய்த ஆராய்ச்சியால் கடவுளுணர்வைத் தான் முற்றிலு மிழந்ததுவிட்டுப் பின் பிரபஞ்சத்தை இயக்கிவைக்கும் சக்தியென்பதொன்றுமே கிடையாதென முடிவு கட்டினான்.

இம்மனிதனைத் தொடர்ந்து வந்தான் அடிமையொருவன். அவன் ஆப்பிரிக்காதேசத்து நீக்ரோசாதியான். காப்பிக் கடைக்குள் மதசாஸ்திர நிபுணன் செல்லவே, அடிமை வெளியிலே வெயிலில் ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து கொண்டான். பாரசீகவாசி அபினிகலந்த பானம் கொண்டுவரச்செய்து அதை அருந்தினான். அபினி உள்சென்று அவன் மனதைக் குழப்பவும் வெளியில் ஈ ஓட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த அடிமையை அழைத்தான்.

வந்த அடிமையை நோக்கி, "ஏ! அடிமை, கடவுள் இருக்கின்றாரா, இல்லையா? நீ என்ன நினைக்கின்றாய் சொல்" என்றான் எஜமானன்.

"அதில் ஐயமென்ன, இருக்கின்றார்" என்று சொல்லி அடிமை தனது மூட்டையினின்று ஒரு மரவிக்ரகத்தை எடுத்துக்காட்டினனாய்ப் பின்வருமாறு விளம்பலாயினான்.

"இதுதான் எனது தெய்வம். நான் பிறந்தது முதல் என்னை ரக்ஷித்துவந்ததும் இதுதான். எனது நாட்டில் பாதிரிமரத்தை எங்கள் வகுப்பார் வணங்குகின்றார்கள். அம்மரத் துண்டால் இவ்விக்கிரஹம் செய்யப்பட்டுளது."

இவ்வாறு அடிமை ஊக்கமுடன் கூறுதலும், காப்பிக்கடைக்கு வந்த மற்றவர்கள் இவர்கள் பேசுவதைக் கவனித்தனர். எஜமானன் கேள்வியும், அடிமையின் பதிலும் அவர்களுக்கு வியப்பைத் தந்தன. அக்கடையிலிருந்த பிராமணன் ஒருவன் அடிமையைப் பார்த்துச் சொன்னான்.

"ஏ முட்டாளே. கடவுளை மூட்டையில் தூக்கிக் கொண்டுபோக முடியுமா? ஒரு கடவுள்தான் இருக்கின்றார். அவர்தான் பரப்பிரம்மம். இப்பிரபஞ்சத்தை விடப் பெரியவர். இப்பிரபஞ்சமோ அவரால் சிருஷ்டிக்கப்பட்டவொன்று. சிருஷ்டிக்கெல்லாம் ஆதியான கடவுள் ஒருவர். அவரது ஞாபகார்த்தமாகக் கங்கைக் கரையில் கோயில் கட்டப்பட்டுள்ளது. கடவுளின் உண்மையான தொண்டர்களான பிராமணர்கள் அவரை அக்கோயிலில் வழிபடுகின்றனர். அப்பிராமணர்களே பிரம்மத்தை அறிந்தவர். எத்தனையோ காலத்தையும், கலகத்தையும் கடந்து இன்னும் தங்களது செல்வாக்கை அவர்கள் நடத்திவருகின்றனர். ஏனென்றால் உண்மையான கடவுளான பிரம்மம் அவர்களைக் காப்பாற்றி வருகின்றது."

தமது திறமையால் எல்லோரையும் நம்பச் செய்துவிட்டதாக அந்தப் பிராம்மணன் இவ்வண்ணம் பேசினான். இதைக்கேட்ட யூதன் ஒருவன் கூறினான்:—

"கடவுளின் உண்மையான வாசஸ்தலம் இந்தியாவன்று. கடவுள் பிராம்மணர்களைக் காப்பாற்றவில்லை. பிராம்மணர்கடவுள் உண்மைக்கடவு ளன்று. அப்ரஹாம், ஐஸக், யாகொப் முதலியோர் வணங்கிய கடவுள்தான் உண்மைக்கடவுள். இஸ்ரலேட் ஜாதியாரைத் தவிர மற்றவர் எவரையும் அவர் காப்பாற்றுவதில்லை. உலகத் துவக்கத்திலிருந்து கடவுளால் விரும்பப்பெற்ற ஜாதியார் நாங்களே. நாங்கள் இப்பொழுது உலகத்தின் பல பாகத்திலும் சிதறியிருக்கின்றோம் என்று நீங்கள் சொல்லலாம். எங்களைச் சோதிக்கவே கடவுள் அவ்வண்ணம் செய்திருக்கின்றார். ஒருநாள் எங்கள் பிதா எமது ஜாதியை ஜெருசலத்தில் சேர்த்துவைப்பார். அவ்வாறு செய்வதாக அவர் வாக்கும் கொடுத்துள்ளார். அந்நாள் ஜெருசலம், கடவுளின் கோயிலாகி உலகத்தின்நாயகமாய் விளங்கும். இஸ்ரவேல் வகுப்பினரே இப்பூதலத்தோர்க் கதிபதியாவர்."



இவ்வாறு உருக்கமுடன் பேசிய யூதன் கண்ணீரும் சொரிந்து நின்றான். இன்னும் சில சொல்ல வாயெடுக்குமுன் இதாலியநாட்டுப் பாதிரி கூறத் தொடங்கினார்:—

"ஐயா, யூதரே, நீர் சொன்னதனைத்தும் பொய். பக்ஷபாதத் தன்மையை இதனால் கடவுளுக்கு நீர்சார்த்தியதாகும். உமது வகுப்பினர்மீது மாத்திரம் அவர் அதிகமான கருணை கொண்டுள்ளார் என்பது தப்பு. நிற்க, இஸ்ரவேல் வகுப்பினர்மீது அவர் அதிகமான அன்பு செலுத்தினார் என்று வைத்துக்கொண்டாலும், அது பண்டைச் செய்தி. கடவுளுக்கு அச்சாதியார் கோபமுண்டாக்கி ஆயிரத்துத்தொள்ளாயிர வருஷமாகின்றது. ஆகவே கடவுள் அவர்களைச் சிதறிப்போகும்படி செய்துவிட்டார். கடவுள் பக்ஷபாதமற்றவர். ரோமாபுரிக் காதலிக் சர்ச்சில் சேருபவர்களே மாத்திரமே அவர் ஏற்றுக் காக்கின்றார். இந்தச் சர்ச்சிற்கு வெளியில் முக்தி கிடையாது."

இவ்வுரை கேட்ட பிராடஸ்டண்டு மதக்கொள்கையன் ஒருவனுக்குக் கோபம் பிறந்தது. அவன் கண்கள் சிவந்தன. எழுந்து, "முக்திக்கு வழி உமது மதம் என்று எப்படிச் சொல்வீர்? ஏசுநாதர் பைபிலில் கூறியபடி நடப்பவனே முக்திபெறுவான். மற்றவரைக் கடவுள் காக்கமாட்டார்" என்றார்.

கிறிஸ்தியர் இவ்விருவர் பேசியவுரை கேட்டிருந்த துருக்கிநாட்டினன் ஒருவன் கூறுவான்:—

"உங்களது ரோமாபுரிமதம் மலையேறிவிட்டது. மகமதுநபி வந்து உங்கள் மதத்தைத் தலையெடுக்காது செய்துவிட்டார். எங்கள் மதம் எங்கும் பரவிவருகின்றது. அறிவில் சிறந்த சீனாவிலும் பரவிவருகின்றது. ஆசியா ஐரோப்பாவிலும் பரவிவிட்டது. கடவுள் யூதர்களைத் தமது கருணையினின்று அகற்றிவிட்டார் என்றீர். யூதர் மதம் தலையெடுக்கமாட்டாமல் நசித்துவருகிறது என்று நீங்கள் பரிகசித்தீர். உங்கள் மதத்தின் நிலையென்ன? உலகமெங்கும் வெற்றியுடன் பரவுவது எங்கள் நபிநாயகத்தின் மதமே. மகமதுவின் மதத்தைப் பற்றுதார் காப்பாற்றப்படமாட்டார். மகமது மதத்திலும் உமார்வழியைப் பற்றினவரே கடவுளின் அன்பிற்குப் பாத்திரமாவர்; அலியின்வழி சேர்ந்தார் உண்மை மதத்திற்கு விரோதிகள்; அவர்களோ ஒருநாளும் உய்ந்திடார்."

இப்பொழுது, அலிவகுப்பைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் உமார்வகுப்பினருக்கு விடைசொல்ல விரும்பினார். அதற்குள் அந்தக் கடையிலிருந்த பல வகுப்பினர்க்குள் விவாதம் ஏற்பட்டது இக்கூட்டத்தில் அபீஸினியக் கிறிஸ்தியரும், திபேத்திய லாமாயரும், அக்கினியை வழிபடும் வகுப்பினரும் இருந்தனர். ஒவ்வொருவரும் பெரியது தன்மதம், பெரியது தன் கொள்கை என்று வாதிட்டனர். (தொடரும்)

# இலஞ்சிப் பாவை.

## 5. சுதஞ்சனை தன் னுள்ளக்கருத் துணர்த்தல்.

'நேசமில் வதுவை நாச காரணமே'

73-வது பக்கத் தொடர்ச்சி.

மறுநாட் செக்கர்வானம் சீத்தெழுவெய்யோன் இளவெயிலெறிப்பத் தத்த மிருப்பிடம் விட்டெழுந்த கோழிகளக் கதிரவனைக் கடிதுயர்ந்து வாவென வெற்றியெற்றி விளிப்ப, தீங்குரற் பறவைகளோங்கு நல்லிசை பயில, உயிர்த்தெழு நாளின் உவகையையேற்றுப் பல்லுயிரும் பரவியார்ப்ப விரிந்தவவ் வேரியின்மீது படகொன்று உழுதுகொண்டிருக்க வதனகவயின் றமியனாய் விஜயன் வீற்றிருக்குங் காட்சி கரையிலிருப்பவர் கண்களிற்பட்டது. பிரிந்துசெல்லும் விருந்தினன் வாடிய முகத்துடன் முடிவில்லா எண்ணத்துள் மூழ்கினவனாய்க் காணப்பட்டான். அவ்வமயம் யாழினிசையொடு கலந்த ஆலாலசுந்தரன் அருள்பாடல்களும் யாதிகன் காதிற் கெட்டின.

1 துடுப்பொழி துளிகளுந் தெளிபுன லடைமுனே
யடுபவர் மனிதரு மவர்பெறு நலந்தனை
விடுமது கடுப்பவிவ் வியன்மனை நினைவினே.

2 வடுப்படு நறும்புனல் வழிமறை படுமுனே
அடுகுவ ரறிஞரு மவர்பெறு நலந்தனை
விடுமது கடுப்பவிவ் வியன்மனை நினைவினே.

3 அரசரி னவைதனி லளவிலாப் புகழொடு
முரசெறி செருவினில் முடிவிலா விசயமும்
விரவிடில் மறந்திடிவ் வியன்மனை நினைவினே.

4 அன்றிநீ மிடியுட னவலமு மடைந்திடில்
நன்றியி னடையினர் தொடர்பினை யொழித்துடன்
மின்பிறழ் குடிமியிவ் வியன்மனை விரைகவே!

பாட்டு முடியப் படகும் கரையுற்றது. விஜயன் வழிக்கொளுமுன், தனக்கோ ரிரவி லுறைவிடமா யிருந்த விடுதியையும், அதுநின்ற நிலையுமொருமுறைப் பரிவுட னுற்றுநோக்கினான். ஆங்கோர் பாங்கர் வாடிய மரமொன்றின்மேற் சாய்ந்திருந்தனன் வயோதிகனானந்திகனொருவன். உலர்ந்த தருவினையொப்ப வுணங்கியிருந்த தவனுருவம். நரைத்துப் பழுத்துத் தளர்ந்தயாக்கையனாய்த் திகழ்ந்த வவனும், விழிகள் வானளாவி நிற்ப, விரல்கள் யாழின் நரம்புகளைத் தைவர, அண்டத்தின் பகுதிகளனைத்துஞ் செல்லுறு செலவில் ஓம்மென முரன்று அச்சுதன் புகழைப்பாடும் பண்ணினை விண்ணிற் கேட்பவன்போ லசைவற் றிருந்தான்.

அவனை யடுத்துப் பாசிபடர்ந்த பாறையொன்றின் மேல், பாசிழைப்பாவையும் அமர்ந்து ஏரியின்மேல் வாத்தொன்று தன் பரிவாரத்தை யிங்குமங்கு மழைத்துச் செல்லும் காட்சியைக் கண்டிருந்தாள். முகத்தில் முறுவல் பூத்தது, அவ்வாத்துக்களை இங்குமங்கும் துரத்திக்குரைத்த வவள் நாய்களின் செய்கையைக் கண்டோ, அன்றி விஜயன் கரையின்மேல் நின்று அவளிடம் விடைபெற்றுக் கொள்வதாய்ப் பல

முறைச்செய்த சயிக்கைகளைக்கண்டோ, அறிகிலோம். வீரன் ஏரியின்விளிம்பில் நின்றழி, நாய்களையே உற்றுப்பார்த்து அவனைக் கண்கொண்டு நோக்காத நங்கை பொழிலைநாடி யவன்திரும்புதலு மவனைநிமிர்ந்துநோக்கித் தலைசாய்த்து விடைகொடுத்தனுப்பிய தெக்காரணம்பற்றியென் றெமக் கன்னைமீரறைவீர்! வள்ளுவனாரே! வள்ளுவனாரே! உமது நல்லறிவு பயிலும் பலபாக்களை யோதிய பின்னர், முற்றுந்துறந்தமுனிவர் நீரேயென்றெண்ணுவோர்க்குக் கற்றதுமுண்டு களவின் வழிநீரென் றையுறவு தோன்றமாறு காமத்துப்பால் வரைந்து தந்தது அனுபவ முதிர்ச்சியாலோ அன்றிப் புலமையின் வளத்தினாலோ? நீர் 'கண்களவு கொள்ளுஞ்சிறுநோக்கமென்றும்,'யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற் றானோக்கி மெல்ல நகும்' என்றும் தீட்டியுள்ளது சுதஞ்சனையின் செய்கைக் கிலக்கணமாய தெங்ஙனம்? பல்லாண்டுகள் கழித்து விஜயன் விருத்தனாய பின்னும் வாய்ச்சொற்களேது பயினுமிலவாய்ச் செய்து, அவளித்த மோன விடையே உன்னுந்தோறு மவனுள்ளத்தை யுருகச் செய்ததன்றோ!

இச்சமயமும் அவன்,

வார்குழல் துகிலொடு சோர மாசிலா
மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்
விரக தாபத்தால் தரளநீர் இறைப்பப்
பரிபுரம் அணிந்த பங்கயம் வருந்துபு
விரல்நிலங் கிழிப்ப வெட்கந் துறந்து
விண்ணணங் கனைய கன்னியர் பலரென்
கண்முன் நின்றங் கிரக்கினும் கலங்காச்
சித்தம் மத்துறு தயிரில் திரிந்து
பித்துறச் செய்தவிப் பேதை யார்கொலோ?

மனோன்மணீயம்.

என்று நினைந்தான். வழிகாட்டி ஒருவனும் சிலநாய்களும் பின்செல்ல, விஜயன் மாதம்போம் காதவழியென்னும்படி படர்ந்தான். சுதஞ்சனையும், மலையைச்சுற்றி யவன் செல்லும்வரை யவனை நோக்கியிருந்து, பின் நல்லுணர்வு வரப்பெற்றவளாய்த் தனது மயக்கினின்றும் தெளிந்து, 'எனது மால்வண்ணர் இவ்வாறு மயங்குவரோ? தெளிவுறு மொழியுடைத் தென்னாட்டினரது வாய்ச்சொற்களைத் தன்வாயங்காந்து செவிமடுப்பரோ? ஓகோ! இதில் நீங்குளது' என்று தனக்குளே தன்னை நொந்து, ஆலாலசுந்தரரைத் தட்டியெழுப்பி, மால்வண்ணரது புகழையெடுத்தோதும் பாடலொன்றைப் பாடும்படி யேவினாள். பாணனும் இசையமைத்துப் பாடலொன்றைப் பாட முயன்றான். மும்முறை முயன்றும் அவன்யாழ் முரண்பட்ட இசையினைத் தந்து, முடிவில் ஓலமிட்டது.

ஆலாலசுந்தரர், "அந்தோ! என்னை வீணாய் மீட்டச் சென்றாய்! இதுவரை உன் வேண்டுகோள் வீண்போனதில்லை. இன்றுஎன்னைவிடக் கற்றோனொருவன் இதை மிழற்றிஇருக்கக்கூடாதோ. ஏமம்நாடிய எனது விரல்களுக்குஎங்குசுவையேமிகுதியாய்ப் பிறக்கின்றதே. என் செய்வேன்? இது துன்னிமித்தமாய்த் தோன்றுகின்றதே! எனது குடும்பத்தில் சொல்லப்படுவதுபோல் இது, உடையவனுக்கு வரவிருக்கும் துன்பத்தை இவ்வாறு தெரிவிக்குமானால், இந்த நரைதிரை மூப்புக்கொண்ட என்னுடலம் மண்கொள்ளப் போவதனால், எனக்கு அச்சமேஇல்லை. துயரும் என்னளவிலேயேநிற்கவேண்டுமென்பதொன்றே என்கோரிக்கை. ஆனால், எனதருஞ்செல்வியே, இந்த வீணை, முன் உன் அன்னையார் இறக்குந்தருவாயிலும் இவ்வாறே புலம்பிற்று. மீண்டும், உன் தந்தை ஓர் நல்விருந்தளிக்கும்போதும், என்கையைமீறி இது இசைகுழறிக் கொட்டிற்று. உடனே நாம் நாட்டினின்றுந் துரத்தப்பட்டோம். இன்னும் என்ன நடந்தேற இருக்கின்றதோ? என் தலைவனுக்கு இன்னும் ஏதாவது கெடுதி நேரிடுமானால், அவரது அரும்புதல்வி சுதஞ்சனைக்கு ஏதாவது தீங்கு வந்தடையுமானால், ஓ வீணையே நீ வீணே கெடுவாய், கெடுவாய்! அதன்பிறகு ஒருவன் உன்னை எடுத்து மீட்டுவான் என்று எண்ணாதே. பேயோடு பழகினாலும் பிரிவது அரிதென்பார்; ஆகையால், கடைநாளில் உன்னை ஒருமுறை யெடுத்து இசைகூட்டிப் பின் உன்னைத் துண்டுபட உடைத்தெறிந்துவிட்டுக் கீழ்வீழ்ந்து நானும் இறப்பேன்" என்றுரைத்து மாழ்கினார்.

சு—எமது நட்பாளரே. என்ன துயரமிது? எம்மிடம் இருக்கும் அன்பினால் உண்டாகும் வீண் துயரத்தை விட்டுவிடும். உமக்கு நாட்டிலுள்ள நல்லிசைகளெல்லாம் நன்றாய்த் தெரியுமே. ஆதலால் நீர் ஒன்றை நினைத்துமீட்ட வேறோரிசை உம்மை யறியாமல் கலந்து வருவதுமுண்டு. இது வாய்ப்பாட்டுப் பாடுவார்க்கு வழக்கமாயிற்றே. இதற்காகவோ இத்துணைத் துயர்! நாங்கள் ஒருவரு மறியாமல் இங்கே மறைந்து வாழ்கின்றோம். எனது தந்தை தனதுயர் பதவியையும், தனக்கிருந்த பெருஞ் செல்வத்தையும், கௌரவத்தையும் இழந்துவிட்டுத் தாமரையிலையில் தண்ணீர்த்துளிபோல், பற்றற்றுக் கலக்கமில்லாமல்இருக்கின்றாரே! அதோ நிற்கும் பெரிய புளியமரத்தைப்பாரும். சிறு செடிகளை வேருடன் பறித்தெறியும் பெருங்காற்று அதை என்ன செய்துவிடுகிறது? அதன்இலைகளைச் சலசலவென்று அலைத்து ஒழியுமே தவிர, நடுமரத்தை என்ன செய்துவிடும்? இச்சிறு துன்பங்களெல்லாம் இலையுதிர்தலுக்குச் சமானமானவை. என்றும் கருணைக் கடலாகிய கடவுளிடத்து மாறா உறுதிகொண்ட என் தகப்பனார் இவைகளையெல்லாம் ஒருபொருட் படுத்துவதில்லை. முன்னாளின் பெருமையொன்றும் அறிவிற் கெட்டாத மிகச்சிறு வயதிலேயே வனம் சென்றடைந்த எனக்கோ, காட்டில் நல்லுணவும், நல்லுடுப்பும் நகைகளு மின்மை துன்பமாய்த் தோன்றவில்லை. (ஒரு மலரை எடுத்துக்கொண்டு) இதோ பாரும்! என் தன்மையை இந்த மலர் உண்மையாய் விளக்கும். இது மன்னரது நந்தவனத்திருக்கும் செம்மலரைப் போலவே பனிநீரை உண்டு அழகாய் விளங்குகின்றது. இவைகளிற் சிலவற்றை நான் அணிந்துகொண்டால், அரசர் சோலையிலுள்ள மலர்களைப்போல் இவையெனக்கு அழகுதர மாட்டாவென்று எவரேனும் சொல்வரோ?" என்று சொல்லி நன்மலர் சிலவற்றை நங்கை அங்கையாற் கொய்து நகையுடன் தனது அளகத்தில்அழகுபெற வமைத்து ஆலாலசுந்தரர்முன் ஓர் ஆடல் காட்டி நின்றாள். அப்பிள்ளைச்சொற் பேச்சினையும் அவள்நின்ற நிலையையுங் கண்ட ஆலாலருக்கு அருந்துயர் நீங்கிற்று. வாகை புரியும் மாதவர்முன், வரந்தரும் தெய்வந்தோன்றி அருந்தவ மொழிகவென்று அளியுடன்



மொழியுங்காலை, மலருமத் தவசிகள் முகம்போலலர்ந்த தவ ரானனம். நெடுநேர மவளை யுற்று நோக்கிப் பின் கண்கலங்கினவராய் "அருமைக் குழந்தாய்! இழந்துபோன செல்வ மின்னதெனநீ அறியாய். அரசசபையில் என்தலைவன் தனக்குரிய உயராதனத்தில் வீற்றிருக்க, அங்கே சூழ்ந்திருப்போரெல்லாம் உனக்கும் உன் தந்தைக்கும் தலைவணங்கித் தாழும்நிலையைக் காணும் நாளும் இன்னொருமுறை எனக்குக் கிடைக்குமோ? மன்னரது திருவோலக்கத்தில்எனது வீணை பயிலும் காலமும், அதன் இன்னிசையைச் சபையோர் கேட்டு மகிழ்ந்து அசைவற்று நிற்கும் காலமும், பின்னர் வியந்தென்னைப் புகழும் காலமும் காணப் பெறுவேனோ?" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தார்.

சு—"இவையெல்லாம் வீண்எண்ணங்கள். இதோ நான் உட்கார்ந்திருக்கும் மாசுபடிந்த பாறையே அரசருடைய அரியாதனத்தைவிட எனக்குச் சிறந்து தோன்றுகின்றது. எனது நடை, இங்கே நடமாடுவதைவிட அரசசபையில் அழகு அதிகங்கொண்டு பயில முடியுமோ சொல்லும். மாகதரைவிட நரைத்த எங்கள் ஆலாலசுந்தரர் பாடும் பாடல்களே எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. என் கண்களின் ஒளிக்கென்ன சொல்லுகின்றீர்? உற்றார் உறவினரையெல்லாம் தான் நோக்கும் நோக்கினாலேயே மருட்டி, நாடு முழுவதையும் நடுங்கச் செய்யும் இராதாகிருஷ்ணனும், பொருசிலைப் புருவம் ஒருதலை நெகிழ்த்து நான் நோக்கில், கொள்ளையிடும் தொழிலை, ஒரு நாளைக்கேனும், நிறுத்திவிடுவானே!"

ஆ—"உஸ்! உஸ்! உன்விளையாட்டிற்கும் நகைப்பிற்கும் அவனுடைய பேச்சுதானா உனக் ககப்பட்டது. அவன் பேரைச் சொன்னாலே இந்தக் காடுமுழுவதும் நடுங்குமே; அழுகின்ற பிள்ளையும் அடங்கிவிடுமே! அரசசபையில் ஒருபிரபுவைக் கொன்றுவிட்டு மாண்டவனுடலினின்று, மீண்டும் உடைவாளை உருவிக்கொண்டு அவன் நடந்தபோது, அருகிருந்த வீரரெல்லாம் அவனை அண்ட அஞ்சிச் சீறியநாகத்தைக் கண்டவர்போல் சிதறிப்போனார்களே, தெரியுமோ? அவன் தன்னூரைவிட்டுத் துரத்தப்பட்டபின்பும் அவனது தலையைக் கொண்டுவருபவருக்குப் பரிசு நியமிக்கப்பட்டும், அஞ்சாது தனது நிலத்தைக் காத்து நிற்கும் இப்பலவானுக்கு இணை யாரிருக்கின்றார்? அதேபோல் ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட உமது குடும்பத்தாருக்கு அரச ஆணையை மீறி அடைக்கலங் கொடுத்தும் அஞ்சா நெஞ்சுடையான் அவனன்றி வேறொருவனுண்டோ? மற்ற அறிஞரெல்லாம் போக்குக்காட்டி, வீண்காரணங் கற்பித்து நம்மைத் வழிகூட்டி யனுப்ப, இக் காட்டிடத்தையாவது நமக்களித்து ஆதரித்தவன் முரட்டுத்தன்மை பொருந்திய இக் கொள்ளைக்காரபிரபு அல்லனோ? அவன் செய்த நன்மைகளுக்குப் பதிலாகப் பருவமுற்றும் மங்கை நின்மணவினை எதிர்பார்ப்பான். என்ன இடையூறு நேரினும் அவைகளை நேர்படுத்தி விடுவான். நீ அவனை மணந்து கொண்டால், அவனுடைய மாதுலனாய உன் தந்தைக்கும் இப்பக்கங்களில் கௌரவம் கிடைக்கும். உன் சொல்லுக்கு அவன் எதிர்மொழி பகரமாட்டான். ஆட்டைப்போல் அவன் உன்னைப் பின் பற்றினும், ஒரு ஆண் சிங்கத்தின் பிடரியை இழுத்துச் செல்வதாய் நீ எண்ண வேண்டும்.

சு—நல்லெண்ணமுள்ள பாணரே! நானும் என் தந்தையும் இராதாகிருஷ்ணன் குடும்பத்தாருக்கு எவ்வளவு கடமைப் பட்டுள்ளோம் என்பதை நான் அறியாமலில்லை. தாய்போன்று என் அத்தை, சிறு குழந்தை முதல் என்னை வளர்த்துப் பாராட்டியதற்காக என் முழுநன்றியையும் செலுத்துகின்றேன். அரசரது சினத் தீயினின்றும் என்னையும் என் தந்தையையும் காத்தளித்த இராதாகிருஷ்ணனுக்கு, எனதாவியையும் வேண்டுமெனின் தருகின்றேன். அவருடைய கடனை இறுக்க இந்தக் கணமும் என்னுடலிலுள்ள உதிரத்தையெல்லாம் சிந்தச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் கைநீண்ட லென்னும் பாணிக்கிரகணமட்டும் என்னால் இயலாது. அன்பில்லாமல் வாழ்க்கைப் படுவதைவிட அரணியத்தில், கடும்புலிகளிடையே வாழ்வது நலம். என்ன, தலையை அசைக்கிறீர்; அவன் வீரனென்பது உண்மையே; ஆனால் பொல்லா மூர்க்கன். தப்பிதமென் றறிந்தபிறகும் தன்னெண்ணத்தையே நிலைநாட்ட விரும்புவான். வள்ளன்மை யுள்ளவன்தான்; ஆனால் அதை, அவன் உள்ளத்தைக் கவர்ந்தோங்கும் சினம், ஆற்றுப்பெருக்கைப்போல் அமிழ்த்திவிடும். நண்பரிடத்தில் அதிகப் பற்றுள்ளவன்தான்; ஆனால் அவன் கையிலிருக்கும் நெடுவாளாகிய இரும்புகூடப் பகைவரிடத்தில் இரக்கங் காட்டுமோ. தன்னை யண்டினாருக்குத் தண்ணீரேபோல் செல்வத்தை இறைப்பான். எனினும் அச்செல்வம் எங்கிருந்து கிடைத்தது? அடுத்துள்ள கிராமங்களைத் தீக்கிரை யாக்கியும், அதிலுறைந்த பெண், குழந்தை, மூத்தோர் தவத்தோர் ஆகிய அனைவரையும் கொன்று, நிலத்தைக் குருதிகொண்டு சேறாக்கியும் நகரங்களைப் பாழாக்கியும் கொள்ளையிட்டதா லீட்டிய பொருளன்றோ அது? என் தகப்பனாருக்காகப் போர்புரிந்த அவனது கைகள் அணிகலம் பெறத் தக்கவையே? ஆனால் பேதையோரைக் கொன்று கறைகொண்டுள்ள அவன் கையையோ நான் பற்றுவது? அவனுக்கு நற்குணங்கள் சில இருப்பினும் அவைகள் யாவும், கருத்துச் சோனாமாரியாய்ப் பொழிய அடர்த்து நெருங்கும் மழைக்கூட்டத்தின் நடுவேதோன்றி மின்மினுக்கும் இரண்டொரு உடுக்களைப்போன்று பொலிவழிந்து கிடக்கின்றன. குழந்தைகளுக்கு இயற்கையிலே, நற்குணமுடையவர் இன்னாரென்றும், வெறுக்கத்தக்க துர்க்குணமுடையார் இன்னாரென்றும்பகுத்தறியும்வல்லமையுண்டன்றோ? நான் சிறுமியா யிருக்கும்போதே இவனைக்கண்டு அஞ்சி நடுங்குவேனே; மூத்த பிறகு அவனது செருக்கும் மூர்க்கமும் அவனை வெறுக்கும்படிசெய்கின்றன. நீரும் அவனுக்காகப் பரிந்து பேசுவீரேல் என்மனம் மிகவும் வருந்தும். ஆகையால் நமது பேச்சை மாற்றுவோம். நமது விருந்தினரைப்பற்றி என்ன நினைக்கின்றீர்?" என வினவினாள்.

---

சில அரும்பதங்களின் பொருள் :—யாதிகன் - வழிச்செல்வோன். கடுப்ப - போல. வியன்மனை - தனியாயிருக்கும் வீடு, அல்லது பெரிய வீடு. வந்திகன் - மங்கலப்பாடகன். செலவு - வேகம். முரன்று - ஒலித்து. சயிக்கை - ஜாடை. பொழில் - சோலை. பரிபுரம் - சிலம்பு. ஏமம் - களிப்பு. ஏங்குசுவை - சோகரசம். வாகை - தவம். ஆனனம் - முகம். ஓலக்கம் - சபாமண்டபம். மாகதர் - புகழ்பாடுவோர். உடு - நக்ஷத்திரம்.

# கம்ப ராமாயணம்

## அயோத்தியா காண்டம்.

### 1. மந்திரப் படலம்.

வியாதன் தீட்டிய வேந்தன் சித்திரம்.

75-வது பக்கத் தொடர்ச்சி

வியாஸ பாரதத்தின் சாந்திபர்வத்தில் பீஷ்மர் அரசுநெறி முறையெலா மெடுத்துத் தருமனுக்கு விரிவுற வோதுகின்றனர் ஆங்கு அமைச்சர்தம் தொழிலுந் திறமையும் இவ்விவ்வகையன வாதல் வேண்டுமென்று, ஆற்றலொடு அறிவும் மிக்க பெரியோர் பீஷ்மரைக் கொண்டு, மறையினை முறைசெய்த முனிவரர் சொல்வித்த வாசகங்களிற் சில ஈண்டு நாம் இயம்புதமையும். பின் வருவன, கும்பகோணம் பிரம்மஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களது மொழிபெயர்ப்பினின்று எடுத்திருப்பவை:—

"இரண்டுபேர் மூன்றுபேர் மந்திரிகளை ஏற்படுத்தக் கூடாது. ஒருவருக்கொருவர் ஸகிக்கமாட்டார்கள். ஒரு காலத்தில், பிராணிகளுக்குப் புத்திபேதம் உண்டாகும் எங்கும் கீர்த்திப் பிரதானனுகவும், சமர்த்தர்களிடத்தில் துவேஷம் செய்யாதவனுகவும், காம பய லோப குரோதங்களால் தர்மத்தை விடாதவனுகவும், ஸமர்த்தனுகவும், போதுமான வார்த்தையைப் பேசுகிறவனுகவும், நல்லகுலத்திற் பிறந்தவனுகவும், சீலத்தோடு கூடினவனுகவும், ஸகிக்கிறவனுகவும், புலம்பாமலிருக்கிறவனுகவும், சூரனுகவும் பெரியதன்மையோடு கூடியவனுகவும், வித்வானுகவும், காரியாகாரிய விவேகத்தில் ஸமர்த்தனுகவும் இருக்கிற மந்திரியை, ஒவ்வொரு வேலையிலும் தனித்தனியாக நியமிக்கவேண்டும். இந்த மந்திரிகளை, அவர்களுக்குத் தகுந்த வேலையில் நியமித்தால், நல்ல ஸகாயங்களோடு கூடினவர்களாய்ப் பெரிய காரியங்களைச்செய்து, இராஜாவுக்கு க்ஷேமத்தை உண்டாக்குவார்.

* * *

"மேதாவியாகவும், ஸ்வதேசத்தில் பிறந்தவனுகவும், எல்லா வேலையிலும் சுத்தனுகவும், ஞானத்தோடு கூடினவனுகவும், தன்னுடைய ஏழு பிரகிருதிகளையும் சத்துருவினுடைய ஏழுபிரகிருதிகளையும் அறிந்தவனுகவும், ராஜாவுக்குப் பிராண சிநேகிதனுகவும், சத்தியவாதியாகவும், ஆசார சம்பன்னனுகவும், வெட்கத்தோடு கூடினவனுகவும் மிருதுவானவனுகவும் இருப்பவன் மந்திர ச்ரவணத்திற்குத் தகுந்தவனுவான்.

இத்தகைய மந்திரிகளோடு கூடிய அரசன் புரிய வேண்டிய செயல்கள் சிலவற்றையும் பீஷ்மரது வாயினின்று நாம் தருமரோடுகூடிக் கேட்டுத் தெரிந்து கொண்டால் அது கம்பரது கருத்தை வரையறுத் துணர்வதற்குப் பெரிதுமுதவும்:—

* * *

"ராஜாவானவன், துர்க்கஸ்தலங்களிலேயும், தேசத்தினுடைய எல்லையிலேயும், பட்டணத்தினுடைய உத்தியான வனத்திலேயும், ஜனங்கள் இருக்கிற இடத்திலேயும், எல்லாத் தேசங்களிலேயும், பட்டணங்களிலேயும் அரண்மனைகளிலேயும், அந்தப்புரத்திலேயும், தூதர்களை வைக்க வேண்டியது. அந்தத் தூதர், பயித்தியகாரர் குருடர் செவிடர், இந்தமாதிரி வேஷத்தோடு கூடினவராயிருந்து,... எல்லா மந்திரிகள், மித்திரர்கள், புத்திரர்கள் பட்டணம் தேசம் சத்ருராஜாக்கள், இவர்களிடம், நான் இராஜாவினுடைய மனுஷ்யனென்று தெரிவியாமல், கடைத்தெருவிலேயும், விளையாடுகிற இடங்களிலேயும், சபைகளிலேயும் பிச்சைக்காரர்கள் இருக்கிற இடங்களிலேயும், ஊருக்குள்ளே இருக்குந் தோட்டங்களிலேயும், ஊருக்கு வெளியே இருக்குந் தோட்டங்களிலேயும், பண்டிதர்கள் சேர்கின்ற இடங்களிலேயும், தேசங்களிலேயும், நாற் சந்தியிலும், இராஜசபையிலேயும் பெரியவர்களுடைய வீட்டிலேயும் இருந்து அங்கே நடப்பவைகளை அறிய வேண்டியது.

* * *

"பலிஷ்டனுன எந்த ராஜா, தனக்கு வசியமாகிறதில்லையோ, தான் சைன்யம் வீர்யம் இவைகளிற் குறைந்திருப்பானுயின், அந்த ராஜாவைச் சங்கடப்படுத்திக்கொண்டுதான் வசிக்க வேண்டியது. அந்தப் பிரபல ராஜாவினுடைய ராஜ்யத்தை ஆயுதம், நெருப்பு, விஷம் இவைகளால் உபத்ரவப் படுத்தவேண்டும். அயல் ராஜாவினுடைய மந்திரிகளுக்கும் பிரியர்களுக்கும் பரஸ்பரம் சண்டையுண்டாக்க வேண்டியது............சத்ருராஜ்யத்தில் உள்ள தானியங்களைக் காட்டுத்தீயினுல் எரிக்கவேண்டியது......குளம் ஏரிகள் இவைகளிலுள்ள ஜலத்தை இறைத்துவிட வேண்டியது. இறைக்கத்தகாத கிணறு முதலான இடங்களிலுள்ள ஜலத்தை விஷம் முதலானவைகள் சேர்த்துக் கெடுக்கவேண்டியது.

"வர்த்தமான காலத்திலேயும் வேறு காலத்திலேயும், எப்போது மித்திரகாரியம் நேரிட்டாலும் அதைவிட்டு, யுத்தத்தில் தன் சத்துருவைக் கெடுக்கும் எதிரியினுடைய சமீபத்தில் இருக்கும் தன் சத்துருவினுடைய சத்துருவை ஆச்ரயித்து வசிக்க வேண்டியது.

* * *

"பிரமன் சொல்லிய லக்ஷம் அத்தியாயங்களையுடைய இராஜநீதியில்......எதிரிகளை மோசம் செய்கிறவகையும் திருடர்களாலும் காட்டாள்களாலும் சத்துருராஜ்யத்தைப் பீடிக்கிறவகையும், நெருப்பை வைக்கிறவர்கள், விஷங் கொடுக்கிறவர்கள், சூன்யம் செய்கிறவர்கள் ஆகிய இந்த ஜனங்கள் மூலமாய்ச் சத்துருவின் சேனுபதிகள் முதலியவர்களைப் பேதப்படுத்துவதுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

* * *

"இரகசியமான வேவுகார்களையும் பிறருடைய மந்திரிகளையும் லஞ்சம் கொடுத்துப் பேதப்படுத்தவேண்டும்.

* * *

"சத்துரு ராஜாக்கள் விஷத்தினுல் ஒரு பெண்ணைச் செய்து, தீபார்தாங்களினின்றும் அற்புதமான பெண்ணுருத்தி வந்திருக்கின்ருள், தாங்கள் அவளை அனுக்ரகிக்க வேண்டும், என்று வஞ்சனை செய்வார்கள். அந்தக் கபடத்தைச் சாரர்கள் மூலமாகக்கேட்டு அவளைத்தன் சமீபத்தில் வரவழைக்கக் கூடாது........வேசையர்களும் நடனம்செய்வோரும் சேனைக்குப் பெரிய இறகுபோலிருப்பவர்கள்.

"குடிகளுக்குத் திருடர் பகைவர் முதலியபயங்களை மின்னல் விழுவதுபோல் அரசனுனவன் காட்டி, அவர்களிடத்தில் திரவியத்தை வசூல் செய்யவேண்டியது........மாட்டினின்று பால்கறப்பதுபோல் குடிகளின்று பணத்தைக் கறந்துகொள்ளவேண்டும்.........தென்னை மரத்திலிருந்து கள்ளை இறக்குவதுபோல் குடிகளிடத்துப் பணத்தை வசூல் செய்து கொள்ளவேண்டும்.

* * *

"இராஜா தன் காரியம் கைகூடுவதற்காகக் கபடமாயிருப்பதையும், இந்தக் காரணத்திற்காக ஈனகாரியத்தைச் செய்கிறதையும், வெளிக்காட்டாமல் இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும்.

* * *

தயரதனது மந்திரிகளின் திறத்தை வகுத்துரைக்குமாற்றாலும், தயரதன் உலகங்காத்த கொள்கையை ஆங்காங்குக் குறிப்பித்திருத்தலாலும், பின்வசிட்டன் இராமனுக்கு மன்னர்முறை போதித்தவைகளிலிருந்தும் கம்பர் அரசநீதி யாதெனக்கண்ட நெறி காண விழைவோர், பீஷ்மர் விளம்பிய இவைகளையுங் கருத்துட்கொள்ளல் வேண்டுமாதலின் ஈண்டுச்செப்பினேம்.




## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

**கம்பராமாயணம்—பாலகாண்டம்**

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்ருர். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

**ஏமாங்கத் திளவரசன்**

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

**முருகன்—ஓர் உழவன்**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

**திருக்குறள்**

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

**பெருமாள் திருமொழி**

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

**ஆறெழுத்தந்தாதி**

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணுசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

**நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.**

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

**ANCIENT JAFFNA**

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஒதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யெளவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

**:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::**



# வர்த்தமானம்

## கலா நிலயம்

### வாழ்த்துக் கவி

வெண்பா

அன்புமய மாந்தமிழை யாதரித்த லோடரிய
முன்புளநன் னூல்களினல் மூதுணர்வு--மன்பதை [யோர்
தாம்பெறவோவ் வோர்வாரம் தான்வருக லாநிலயம்
ஏம்பெறவாழ் வெய்துகநன் கே.

மணிகைமேடு கே. நாராயணன்.

## நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பனி காலண்டர்.

சென்னை பிராட்வேயிலுள்ள நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியாரார் காரியாலயத்திலிருந்து 1930. வருஷக் காலண்டர் வரப்பெற்றோம். உயர்ந்த பளபளப்பான அட்டையில் நல்லகாகிதத்திலான காலண்டர் இணைக்கப் பெற்றுள்ளது. ஒப்வுநாட்கள் சிவப்பு எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. சுருங்கக்கூறின் காலண்டர் பார்ப்பவர் கண்ணைக்கவரும் தன்மையது அழகும், உபயோகமும் ஒருங்கே யமையுமாறு பொருள் லோபமின்றி இக்காலண்டரை ஆக்கிய மேற்படி இன்ஷியூரன்ஸ் கம்பனியாரைப் பாராட்டுகின்றோம்

***

## பூர்வஜன்மம்

கொராக்பூர் டிப்டிகலெக்டர் அலகபாத்தில் பிரசுரமாகும் 'லீடர்' என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகின்றார்:—

வடஇந்தியாவில், மைபின்புரி ஜில்லாவைச் சேர்ந்த கௌராரி என்றொரு கிராமம் இருக்கின்றது. அக்கிராமவாசியான ராம்சரன்மஹாஜன் என்பவருக்கு, 1927-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ந் தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இப்பொழுது அக் குழந்தைக்கு மூன்றுவயது நிறைந்துவிட்டது. மூன்று மாதத்திற்கு முன் அக்குழந்தை சட்டை யணிந்துகொண்டு, பாரா என்ற கிராமத்திற்குச் செல்லும் பாதைநோக்கி நடக்கத் துவக்கிற்று. அதன் பெற்றோர் எங்கே போகின்றாய் என்றுகேட்க அக்குழந்தை, "நான்முன்ஜென்மத்தில் பாராவில் வசித்து வந்தேன். அப்பொழுது என் பெயர் கோபிபானியா வாகும். நான் வைசிய மறபினனாகையால் எனக்கொரு கடை இருந்தது. நான் ஒரு நாள் உள்ளிருந்து சாயப்பொடி எடுக்கச் செல்லுகையில் நல்லபாம்பு தீண்ட இறந்தேன். எனக்கு ஒரு மனைவியும், இரண்டு குழைந்தைகளும் உண்டு. அவர்களைக்காண விரும்பியே செல்கின்றேன்" என்று கூறியது. பாரா என்னும் கிராமம் கௌராரியிலிருந்து 3-மைலே யாதலால் இக்குழந்தையின் வார்த்தை உடனே சோதிக்கப்பட, எல்லாம் உண்மையாயிருந்தது. இக்குழந்தையின் முன்ஜன்ம மனைவி இச்சங்கதி அறிந்ததும் கௌராவிற்குத் தன் குழந்தைகளுடன் வந்தாள். அவளைக் கண்டதும் அக்குழந்தை அவளை விட்டு அகல மறுத்தது. அவளை ஊருக்குச் செல்ல விடைதரவும் மறுத்தது. இக்குழந்தை முன் ஜென்மத்தில் வசித்த வீட்டில் புதையல் இருப்பதாகவும் அது தான் புதைத்துவைத்த பணம் என்றும் கூறிற்று. அவ்வீடு இப்பொழுது வேறொருவருக்குச் சொந்தமாய் விட்டதால் அதைச் சோதிக்க முடியவில்லை. ஆனால் அவ்வீட்டின் சொந்தக்காரர் சமீபத்தில் பணக்காரராயுள்ளார். இந்நிகழ்ச்சி எங்கும் வியப்பைத் தந்துவருகின்றது.

***

சநாதன தர்ம மஹாநாடு:—இம்மாதம் 29-ந் தேதி அலகபாத்தில் நடைபெறும் கும்பமேளவிழாச்சமயம், அங்கு அகில இந்திப சநாதனதர்ம மஹாநாடு நடைபெறும். மாங்கீர் ராஜா, ரகுநந்தன பிரஸாத் இம் மஹாநாட்டில் தலைமை வகிப்பார். ஸ்ரீ மாளவியா மஹாநாட்டைத் திறந்து வைப்பார், என்று அலகபாத் செய்தி கூறுகின்றது.

***

கூட்டுறவு:—கோயமுத்தூர் தமிழ்நாட்டு ஐக்கிய பெடரேஷன் சங்கத்தார் (Co-operative Federation) வெளியிடும் 'கூட்டுறவு' என்னும் மாத சஞ்சிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றோம். ஐக்கியசங்க முறை ஜனங்களிடம் பரப்பி, ஜனங்களின் செல்வநிலையை வளர்ப்பதும், விவசாயம், கைத்தொழில் இவைகளை வளர்ப்பதும், ஒருவரிடம் பணம்போய்ச் சேராது, எல்லோருக்கும் பயன்படும்படி செய்ய முயல்வதும் இதனது முக்கிய நோக்கமாகும்.

ஐக்கிய நாணய சங்கத்தாருக்கு வருஷ சந்தா ரூ. 2-0-0. தனி மனிதர்களுக்கு வருஷ சந்தா ரூ 4-0-0. தனிப்பிரதி விலை ரூ 0-8-0. வேண்டுவோர், மானேஜர் தமிழ்நாட்டு ஐக்கியபெடரேஷன், கோயமுத்தூர் என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

***

பாபு சுபாஷ் சந்திரபோஸ்:—வங்காளத் தலைவரான பாபு சுபாஷ் சந்திரபோஸும், அவர் நண்பர்கள் 11பேரும் யதீன்தாஸர்தினக் கொண்டாட்டத்தை நடத்தி அரசாங்கத்தின்மீது ஜனங்களுக்கு அறுவெறுப்புஏற்படக்கூடிய பிரசங்கம் செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். கல்கத்தா மாஜிஸ்டிரேட் சுபாஷ் சந்திர போஸிற்கும் மற்றவர்க்கும் ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார். சென்ற வெள்ளிக்கிழமை யன்று, அப்பீல் முடியும்வரை ஜாமீனில் கைதிகளை விடுமாறு மனுச் செய்துகொள்ளப்பட்டது. பூர்ண விடுதலைக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென வாக்குறுதி தருமாறு நியாயாதிபதி கேட்க எத்தகைய நிபந்தனைக்கும் ஆளாகக் குற்றவாளிகள் மறுக்கவே ஜாமீனில் விடுவதற்குக் கோர்ட்டார் மறுத்தனர்; என்று கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.

***

வரிகோடா இயக்கம்:— திருநெல்வேலிக் கடயம் என்னும் ஊரிலுள்ள யூனியன்போர்டார் அம்பாசமுத்திரத்தை கடயம் யூனியனுடன் இணைக்கஏற்பாடுசெய்தனர். அம்பாசமுத்திரவாசிகள் இந்த ஏற்பாட்டை விரும்பவில்லை. ஆகவே அவர்கள் தங்களூரை யூனியனுடன் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்றும், அப்படி இணைத்துவிட்டால் வரிகொடா இயக்கத்தைத்துவக்க நிச்சயித்திருப்பதாகவும் தாசில்தாருக்கு மனுச்செய்துள்ளனர். வரிமறுக்கும் மனோபாவம் ஜனங்களினிடம் வளருவது நல்லதன்றென்றும், திருநெல்வேலியில் டார்டோலி நிகழ்ச்சி நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் தாசில்தார் அம்மனுவில் குறித்து அதைக் கலக்டருக்கு அனுப்பியிருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

189089

KALANILAYAM.
REG. NO. M, 2324.


# OUR OWN PUBLICATIONS

**THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA** Vol. 1. 1542-1614

*by* THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

**THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES**

*by* K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

**THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905**

*by* POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

**ECONOMIC DEVELOPMENT :**

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

**LIFE OF BARRISTER SAVARKAR**

*by* CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

**HINDU-PAD-PADASHAHI :**

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

**ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA**

*by* V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

**LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION**

*by* MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

**DIALOGUE DIVINE AND DRAMATIC**

*by* GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணைகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்-S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II „ **As. 4.**
23. Book III „ **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

**(V. P. Charges, Extra of the Prices.)**

**B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)